255

தொகுதி 8.] 1929ஆ ஜூன்மீ 1உ [பகுதி 5

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



12 JUL 1929

...ரசுரகர்த்தர்
...சாமி முதலியார்,
...லயம், சென்னை.

JL
M29.8.5
186534

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது "சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" என்கிற நாவல் நடந்து வருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0
அர்ஜுனஸிங், சுந்தர் ,, 0 2 0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4 0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் ,, 3 4 0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ,, 2 0 0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் ,, 1 12 0

---

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

JUL 1929 MADRAS

அந்தச் சமயத்தில் விபாங்கன் நாகம்மாளை நோக்கி "இதோ பார் இவர்தான் மிகப் பிரசித்திபெற்ற துப்பறியும் நிபுணராகிய சங்கரதாஸ்" என்று வேணுமென்றே கேலியாகக் கூறினன். அப்போது சங்கரதாஸின் மனதிலுண்டான கோபமும் வெறுப்பும் கொஞ்சமல்ல. விபாங்கன் அவ்வளவோடு சும்மாயிராமல் நாகம்மாளை நோக்கி "நீ மெய்யான சந்திராபாயை என்ன நிலைமையில் விட்டுவிட்டு வந்தாய்?" என்று கேட்டான்.

அந்த மாயக்கள்ளி "சந்திராபாயை அப்படி யிப்படி நகர முடியாத நிலைமையில் விட்டு ஒரு அறையில் பூட்டி விட்டு வந்து விட்டேன்" என்று கூறிக்கொண்டே தன் கைக் கடியாரத்தை யெடுத்துப் பார்த்து "ஆச்சு இன்னும் இருபது நிமிடங்களில் அவள் இருக்கும் வீடு நான் வைத்து விட்டு வந்த தீ யந்திரத்தால் பற்றிக்கொள்ளும்" என்று பெருமையோடும் சந்தோஷத்தோடும் கூறினாள்.

அதைக் கேட்டதே சங்கரதாஸ் தன் கட்டுகளை யறுத்துக்கொள்ள முயன்றான். சற்றும் பயன்படவில்லை. விபாங்கன் நாகம்மாளை நோக்கி "குழந்தாய்! போதும். நாம் போகலாம் வா!" என்று அவளை யழைத்துக்கொண்டு அந்த அறையைவிட்டுச் சென்றான். சங்கரதாஸ் அந்த அறையின் மத்தியி லிருந்த ஸ்தம்பத்தில் கட்டப்பட்டிருக்கிறான். எத்தகைய பலாட்டியனாயினும் வெளியுதவி யின்றிக் கட்டை யவிழ்த்துக்கொள்ள முடியாதென்று அக்கள்ளர்க ளறிவார்கள். ஆதலின் பயமின்றி யவனை விட்டுவிட்டுச் சென்றார்கள்.

*　　*　　*　　*

தன் வீட்டின் மேல்மாடியில் ஒரு அறையில் நாற்காலியில் நகரமுடியாமல் கட்டப்பட்டுக் கிடக்கும் சந்திராபாய் சற்றுநேரங் கழித்து ஸ்மிருதி சுயாதீனத்திற்கு வந்தாள். அதற்குள் அம் மயக்கப் புகையின் குணம் ஒழிந்தது. முதலில்



186534

தன் சிரசை யிப்படியும் அப்படியும் அசைத்தாள். அப்போது பூரண ஸ்மரணை யவளுக்கு வரவில்லை. பிறகு காலம் செல்லச் செல்ல அம்மயக்கப் புகையின் குணம் ஒழிந்த போது சற்று தாராளமாகத் தலையைத் திருப்பி விஷயங்களை நினைவிற்குக் கொண்டுவர கஷ்டப்படுகிறாள்.

அச்சமயந் தான் சங்கரதாஸ் கட்டளையிட்டபடி வாதாஸிங் சந்திராபாயின் வீட்டிற்கு வந்தான். அவன் கதவைத் தட்டியதும் ஜெகநாதன் வந்து கதவைத்திறந்து அவனை யழைத்துப்போய் ஜானகியம்மாள் இருக்கும் அறையில் விட்டான். அவனைக் கண்டதே வாதாஸிங் "சங்கரதாஸ் ஒரு உளவின்மேல் சென்றிருக்கிறான். இங்கு விஷயங்கள் எப்படியிருக்கின்றனவென்று பார்க்க என்னை அனுப்பினான். சந்திராபாய் க்ஷேமந்தானே?" என்றான்.

ஜானகியம்மாள் "நான் சந்திராபாயை ஒருமணி நேரமாகக் காணவில்லை. அவள் வெளியிற் சென்றாள்போ லிருக்கிறது. நீ தாமதிப்பா யல்லவா?" என்றாள். வாதாஸிங் வேறென்ன செய்வது. பேசாமல் அவள் வரவை யெதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியதே. ஆனால் பலவிதமான மனக்கலக்கத்தோடு அங்கு உட்கார்ந்தான்.

இதற்கிடையில் மேல்மாடியில் பழைய உக்கிராண அறையில் நாற்காலியில் கட்டப்பட்டு சிக்கிக்கொண் டிருக்கும் சந்திராபாய் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பூரண ஸ்மரணை யடைந்தாள். உடனே அவளுக்கு விஷயம் ஒருவாறு மனதிற் புலப்பட்டு விட்டது. எப்படியெனில் அவள் பின் வருமாறு சிந்தித்தாள்:—

"இப்போது நம் வீட்டில் வேறு யாரும் புதிதாக வரவில்லை. நாம் அன்னியர் ஒருவரையும் உள்ளே சேர்க்கவில்லை. இந்தப் பெண் ஒருத்தியைத்தான் ஆபத்தைக் கருதிச் சேர்த்துக் கொண்டோம். இவளுக்குத்தான் ஒரு பெரிய

சிப்பம் வந்தது. இத்தகைய வஞ்சகச் சூத்திர முடைய நாற்காலி நம் வீட்டிலில்லை. இவள் நம் எதிரிகளின் உளவாளியாக வந்து இக்காரியத்தைச் செய்திருக்கிறாள். இதில் இன்னும் ஏதோ பெரிய ஆபத்திருக்கவேண்டும். நம்மையிந்த எந்திர நாற்காலியில் சிக்கவைத்ததோடு இது முடிந்து போவதா யிராது'' என்று இத்தகைய சிந்தனை மனதி லுதித்ததே சந்திராபாய் மிக்க பீதி யடைந்துவிட்டாள். "நமக்கே யித்தகைய தந்திரமான சூழ்ச்சியின் வழியாகப் பிராணபத்தை விளைவிக்கத் துணிந்த சண்டாளர்கள் நமது பாதுகாவலராகிய சங்கரதாஸுக்கும் அவர் நண்பருக்கும் எத்தகைய தீங்கிழைப்பார்களோ!'' என்று சிந்தித்து மிக்க மனக் கலக்கமடைந்து விட்டாள்.

இவள் கலக்கம் இதோடு போகவில்லை. இவள் கட்டப்பட்டிருக்கும் நாற்காலியின் பின்பக்க மறைவில்தான் அந்தப் படுமோசக்காரியாகிய நாகம்மாள் நாற்காலியோடு சிப்பத்தில் வந்த தீப்பற்றும் எந்திரத்தை வைத்திருக்கிறாள். அது பற்றியதே தீ மூண்டெரியும் வண்ணம் அதன்மேல் பழைய சாமான்கள் உடைகள் முதலியவற்றைக் குவித்து வைத்திருக்கிறாள்.

விபாங்கனிடம் நாகம்மாள் கூறியபடி இருபது நிமிடங்கள் கழிந்ததும் தீப்பற்றத் தொடங்கியது.

அதைக் கண்டதே சந்திராபாய் திப்பிரமை யடைந்து கடுங்கி விட்டாள். தான் நிராதரவாய் நாற்காலியில் நகர முடியாமல் கட்டுப்பட் டிருக்கிறாள். அவள் தன்னால் கூடிய வரையில் கூச்சலிட்டாள். ஆனால் அவள் போடும் சத்தம் எப்படிக் கீழிருப்பவர்களுக்குக் கேட்கும்? அவள் இருக்கும் அறையோ பூட்டப்பட் டிருக்கிறது. அந்த அறையின் கதவு மிகத் தடித்தது.

---

## 24-வது அத்தியாயம்

சங்கரதாஸ் சிக்கிக்கொண் டிருக்கும் இடம் சீனக்காரர் சீடா அடிக்குமிடம். அக் கட்டிடத்தின் பின் பக்க மிருக்கும் ஒரு அறையில் விபாங்கனும், சங்கும் மிக்க ஆவலோடு குசுகுசு வென்று பேசிக்கொண் டிருக்கிறார்கள். சங்கு மிக்க சுறுசுறுப்பாய் ஒரு கத்தியைக் கூர் பார்த்துக் கொண் டிருக்கிறான்.

சங்கு ஒரு வரங் கேட்பவன்போல் "எஜமானே! அவனை முடித்து விடுகிறேன்" என்றான். விபாங்கன் சற்று சிந்தித்து ஒரு நிமிடங் கழித்து "சற்று பொறு. இப்போது தான் அங்கு தீப்பற்றத் தொடங்குகிறது. சங்காதாஸ் மரிப்பதன் முன் அந்த வெள்ளைப் பெண்ணாகிய சந்திராபாய் தீயில் பற்றி யெரிகிறாள் என்பதை யறிந்து அவன் மடியவேண்டும். அவன் முன்னாடி மடிவதைவிடப் பிறகு மடிவதே நமது வஞ்சத்தைப் பூரணமாக்கும்" என்றான்.

கம்பத்தில் கட்டப்பட் டிருக்கும் சங்காதாஸின் மனம் எவ்வளவோ வேதனைப் பட்டுக்கொண் டிருந்தாலும் தன் கட்டை யவிழ்த்துக்கொள்ளும் முயற்சியை மட்டும் அவன் விட்டவனல்ல. அவன் என்ன முயன்றாலும் தன் கரங்களையும் புயத்தையும் சற்று அசைக்க மட்டுமே முடிகிறது.

அச்சமயம் திடீலென்று அவன் மனதில் ஒரு யோசனை யுதித்தது. நல்ல எண்ணத்தோடு பிறர் நன்மையின் பொருட்டு வேலை செய்வோர்க்குக் கடவுள் உதவியா யிருக்கிறார் என்பதற்கு இதுவே போதுமான திருஷ்டாந்தமாகும். சங்காதாஸ் சுருட்டைப் பற்றவைக்க ஒரு புது யுக்தி கண்டு பிடித்தா னென்று முன்னம் கூறினோமல்லவா. அந்த மின்சார எந்திரம் அச்சமயம் அவன் சேபியிலேயே யிருக்கிறது.

அவன் உடனே தன் கரத்தை மெதுவாய் நெகிழ்த்திக் கஷ்டத்தோடு முயன்று தன் கரங்களி லிருக்கும் கயிறு சட்டைக் கரத்திலுள்ள பொத்தான் மேல் வரும்படிச் செய்தான். பிறகு தன் புயத்தை யழுத்தியதே மின்சாரம் பொத்தானில் பாய்ந்து கயிற்றை யெரிக்கத் தொடங்கியது. இவ்வாறு கொஞ்சங் கொஞ்சமாய் அவன் தன் கட்டுகளை யெல்லாம் விடுவித்துக் கொண்டான். கடைசியில் அவன் வரதாஸிங்குக்கு வேடிக்கைக் காட்ட செய்த சூழ்ச்சி பெரிய ஆபத்தினின்று அவனை விடுவிக்கும் கருவியாய்விட்டது.

அவன் இருக்கும் அறையின் கதவிற்கு மறு பக்கத்தில் தான் விபாங்கனும் சங்கு முதலியவர்களு மிருக்கிறார்கள். சங்கு தன்னைக் கொன்று விடும்படி விபாங்கனை யனுமதி கேட்பதும் விபாங்கன் ஆலசியம் செய்வதுமாகிய யாவும் சங்கரதாஸுக்குச் சுமாராகக் கேட்கின்றன.

விபாங்கன் கடைசியில் தன் கடியாரத்தைப் பார்த்து, இதுகாறும் சந்திராபாயின் வீடு தீப்பற்றி யெரியும் என்று எண்ணிக்கொண்டு "சரி, இனி யுன் இஷ்டப்படி வேலை முடியட்டும்" என்று சங்கையும் அங்கிருந்த வேறு இரண்டு மூன்று சீனக்காரர்களையும் நோக்கிக்கூறினான்.

அதற்கிடையில் தன் கட்டுகளையெல்லாம் அவிழ்த்துக் கொண்டு சங்கரதாஸ் எழுந்து நின்று இரண்டொரு நிமிடம் இங்கிருந்து எப்படித் தப்பித்துக்கொண்டு வெளிச் செல்லலாம் என்று சிந்தித்தான். அவனுக்கு ஒரு மார்க்கமும் புலப்படவில்லை. அவன் மனமோ பதைக்கிறது. விபாங்கனுக்கும் நாகம்மாளுக்கும் நடந்த சம்பாஷணையால் சந்திராபாய் பிராணாபத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறாள் என்று அவனுக்குப் புலப்பட்டு விட்டது. அதுவே யவனுக்கு அளவு கடந்த தீரத்தையும் துணிகரத்தையு மளித்தது.

சங்கரதாஸ் எப்படி வெளிச்செல்லலா மென்று சிந்தித்துக்கொண்டு நிற்கையில், அடுத்த அறையிலிருந்து ஆட்கள் வரும் சத்தம் கேட்டது. அவன் அவர்கள் தான் இன்னும் அந்தக் கட்டில் சிக்கி யிருப்பதாகவே எண்ணிக்கொள்ள வேண்டுமென்று கம்பத்தினருகில் நின்று கயிறுகளை முன் அவை யிருந்ததுபோல் வைத்துக்கொண்டான்.

மறு விநாடி கதவு திறக்கப்பட்டதும் விபாங்கனும் சங்கும் கரங்களில் பிடித்த கத்திகளோடு முன்னே நுழைந்தார்கள். அவர்கள் பின்னால் இன்னும் மூன்று சீனுக்காரர்கள் சென்றார்கள். விபாங்கன் மற்றவர்களுக்கு முன்னே சென்று சங்கரதாஸின் எதிரில் நின்று முன்னமே பூரணஜயமடைந்தவன்போல் தன்கரத்திலுள்ள கத்தியை யுபயோகிக்க ஆயத்தமாய் உயரத் தூக்கிக்கொண்டு சங்கரதாஸை நோக்கி,

"அந்த வெள்ளைப் பெண்ணாகிய சந்திராபாய் தீயில் மெதுவாய் வெந்து மடிந்துகொண் டிருக்கிறாள். அவளுக்கு விடப்பட்ட காலம் கடந்து விட்டது." என்றான்.

அந்த மூடன் இவன் கட்டப்பட்டு நகரமுடியாம லிருக்கிறானென்று கருதி சற்றும் சாக்கிரதையின்றி மிக்க அலட்சியமாகக் கூறினான். சங்கரதாஸோ கட்டிலில்லை. அதோடு தன் ஆபத்துமட்டுமல்ல; சந்திராபாய் பிராணாபத்தில் சிக்கி யிருக்கிறாள் என்ற எண்ணம் அவனுக்கு என்று மில்லாத தைரியத்தையும் துணிகரத்தையும், தன் பிராணனில் அலட்சியத்தையும் அச்சமயம் அளித்திருக்கிறது. இந்தச் சீனுக்கார மூடர்களுக்கு அது தெரியாமல் தங்கள் காரியம் பூரணமாய்ச் செயமடைந்த தென்று கருதி விட்டார்கள்.

விபாங்கன் கத்தியை யோங்கிக்கொண்டு நிற்பதைக் கண்ட சங்கரதாஸ், வேங்கைபோற் பாய்ந்து ஒரே யடியில்

விபாங்கனைத் தரையில் வீழ்த்தி விட்டான். திடீலென்று எதிர்பாராதவண்ணம் நடந்த சம்பவத்தைக்கண்டு பிரமித்த சங்கு என்ன நடக்கிறதென் றறியுமுன் ஓரேகுத்தில் தரையில் மோதப்பட்டுத் தன் எஜமானுகிய விபாங்கன் பக்கத்தில் உருண்டு விட்டான்.

அச்சமயம் அங்கு கீழே கிடந்த ஒரு கத்தியை யெடுத்துக்கொண்டு சங்கரதாஸ் படபடவென்று, அங்குப் பிரமித்து நின்ற மற்ற மூன்று சீனக்காரரையும் வரிசையாய் வீழ்த்தி விட்டான். அதன் பிறகு சங்கரதாஸ் அக்கத்தியோடு ஆக்ரோஷம்கொண்ட வேங்கைபோல் சீட்டாக் கடைக்குள் நுழைந்து வெளிப்பட முயன்ருன்.

அங்கிருப்பவர்க ளனைவரும் விபாங்கன் பட்சத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அங்குள்ளவர்களில் போதையால் ஸ்மரணை யிழக்காதவர்களெல்லாம் சங்கரதாஸை வெளிச் செல்ல வொட்டாது தடுத்துப் பிடிக்கப் பார்த்தார்கள். சங்கரதாஸோ தன்கையில் சிக்கிய கத்தியை வலசாரி இடசாரியாய்ச் சுழற்றிப் பிடித்துக்கொண்டே யானைக்குட்டிகளின் கூட்டத்தில் சிங்கம் நுழைந்ததுபோல் சென்ருன்.

அதனல் ஒருவரும் முன்நிற்க முடியாமல் கடைசியில் பின்னல் துரத்திச்செல்ல முயன்ருர்கள். சங்கரதாஸோ எதிர் நின்றவர்களை யெல்லாம் அடித்து வீழ்த்தி அல்லது துரத்திக்கொண்டே அக் கட்டிடத்தை விட்டு வீதியில் பிரவேசித்தான். அந்தப்பிரதேசம் சீனக்காரர் வசிக்கு மிடமாயினும் சங்கரதாஸ் வீதியில் வந்துவிட்டபின் அவனைப் பிடிக்க அவர்களால் முடியாது.

சங்கரதாஸுக்கு இப்போது தான் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டதால் மட்டும் எவ்விதத் திருப்தியு முண்டாக

வில்லை. "சந்திராபாய் பிராணபத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறாள். அவளைக் காப்பாற்ற நமக்கு அவகாசமிருக்கிறதா" வென்பதே யவன்கவலை. ஆகையால் அங்கிருந்து அதிவேகமாய் ஓடினான். தற்காலமாய் எதிரில் ஒரு வாடகைவண்டி காலியாய் வந்துகொண்டிருந்தது. உடனே அவ்வண்டியை நிறுத்தி யதிலேறிக்கொண்டு சாரதியிடம் சந்திராபாயின் வீட்டுவிலாசத்தைக் கூறி "நான் துப்பறிபவன். நீ காற்றுப் போல் வண்டியைச் செலுத்திக்கொண்டு போகவேண்டும். ஆலசியம் செய்தால் உன்னால் அங்குப் பலபேர் மடிவார்கள். பத்திரம்" என்றான்.

அந்தநாட்டில் வண்டிக்காரருக்குத் துப்பறிபவர்கள் என்றாலே பெரும்பீதி. அதிலும் அந்த வண்டிக்காரன் சங்கரதாஸை யறிந்தவன். ஆகையாலவன் அதிவேகமாய் வண்டியைவிட்டான். சங்கரதாஸின் மனம் அச்சமயம் சொல்லொணா விதமாய்த் தத்தளித்துக் கொண் டிருக்கிறது.

* * * *

சந்திராபாயின் வீட்டில், அவள் வெளியில் சென்றிருக்கிறாளென்று கருதி, அவள் வரவிற்காகக் காத்துக்கொண் டிருந்த வரதாஸிங், ஜானகியம்மாளை நோக்கி "நான் இரசாயன அறைக்குச்சென்று சங்கரதாஸ் வருகிறானாவென்று பார்க்கிறேன். சந்திராபாய் வந்ததும் சங்கதி தெரிவியுங்கள்" என்றான்.

வரதாஸிங் அவ்வாறு கூறிவிட்டுக் கீழிறங்கி வெளிவாயிலைக் கடந்து வீதியில் இறங்கப்போகிறான். அச்சமயம் ஒருவண்டி பேயால் ஓட்டப்பட்டதுபோல் அத்தகைய அளவு கடந்த வேகமாய் வந்து வீட்டினெதிரில் நின்றதும் சங்கரதாஸ் பாய்ந்து வெளியில் வந்து குதித்தான். அதைக் கண்ட வரதாஸிங் மிக்கவியப்போடு அவனை நோக்கினான்.

சங்கரதாஸ் வரதாஸிங்கைக் கண்டதும், "சந்திராபாய் சுகமா?" என்று மிக்க ஆவலோடு கேட்டான். வரதாஸிங் "அவள் வீட்டிலில்லையே" என்றான்.

அதைக்கேட்ட சங்கரதாஸ் "உனக்கு அவள் வீட்டிலில்லையென்று நிச்சயமாகத் தெரியுமா? வீடுமுழுமையும் சோதித்துப் பார்த்தாயா?" என்றான். அக்கேள்விகளைக் கேட்டதே வரதாஸிங் தான் அவ்வாறு செய்யாததால் "ஏதோ மோசம் போய்விட்டோம். நாம் இங்கு உட்கார்ந்து அவள் வருகைக்காக எதிர்பார்த்தகாலம் வீட்டை முழுமையும் சோதித்திருக்கவேண்டும்" என்று பீதியடைந்தான்.

அதற்குள் சங்கரதாஸ் வீட்டின் மேல்பாகத்தில் சாளரங்களிலிருந்து கொண்டல் கொண்டலாகப் புகை கிளம்புவதைக்கண்டதும் சீட்டாக்கிடங்கில் நாகம்மாளும், பிறகு விபாங்கனும் கூறிய சங்கதிகள் உடனே அவன் நினைவிற்கு வந்தன. அவன் பீதியடைந்து வரதாஸிங்குக்கு அப்புகையைச் சுட்டிக்காட்டி

"அடடா! அதோபார்! அய்யோ தீ தீ!" என்று கூறிக்கொண்டே பாய்ந்து உள்ளேசென்றான். இவர்கள் மேலேறிச்செல்லும்போது எங்கோ ஒரு அறையிலிருந்து பரிதாபமான கூச்சல் கிளம்புவது கேட்டது.

தீயென்ற சத்தத்தைக்கேட்டதே ஜகநாதன் தீயணைக்கும் கருவியைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தான். இவர்கள் சத்தம் வருமிடத்தை நோக்கிச்சென்று சந்திராபாய் சிக்கியிருக்கும் அறையின் முன்போய் நின்றதும், உள்ளேயிருந்து,

"அய்யோ தீ யென்னை நெருங்குகிறது. உதவி உதவி" என்று உள்ளிருந்து சத்தம் கிளம்பியது.

சங்கரதாஸும் வரதாஸிங்கும் ஏககாலத்தில் தங்கள் முழுபலத்தையும் காட்டிக் கதவின்மேல் மோதி மிக்க கஷ்

டத்தின்மேல் அதை யுடைத்துத் திறந்தார்கள். சந்திராபாய் விபாங்கன் அனுப்பிய சூத்திர நாற்காலியில் சிக்கிக்கொண்டு அசையமுடியாத நிலைமையிலிருக்கிறாள்.

சங்கரதாஸ் பார்த்தவுடனே சங்கதியாவு முணர்ந்து கொண்டான். தீ சுவாலையாய்ப் பற்றி யெரிகிறது. "உடனே நாற்காலியோடு வெளியிற் கொண்டுபோங்கள்" என்று கூறி விட்டுத் தீயணைக்கும் எந்திரத்தால் தீயையணைக்கத்தொடங்கி அங்கு எரிந்துகொண் டிருந்த துணிகளையெல்லாம் ஒன்று சேர்த்தணைத்துத் தீயை யணைத்துவிட்டான்.

இதற்கிடையில் வரதாஸிங்கும் ஜகநாதனும் சந்திரா பாயிருந்த நாற்காலியை யப்படியே தூக்கி வெளியில் கொண்டுவந்து விட்டார்கள். அதற்குள் அவள் அத்தையும் மாரியும் மற்ற ஆட்களும் அங்கு வந்துவிட்டார்கள். சங்கர தாஸ் தீயை யணைத்தபின் ஓடிவந்து சந்திராபாயை நோக்கி "உனக்கு ஒன்றும் ஆபத்தில்லையே!" என்றான். சந்திராபாய் அச்சமயத்திலும் தீயால் தனக்குண்டான கஷ்டங்களையெல் லாம் மறந்து "உனக்கு ஆபத்துண்டாகவில்லையே?" என் றாள். மறுவிநாடி யவள் மூர்ச்சை யடைந்து விட்டாள்.

சந்திராபாய் அங்கிருந்து அவள் படுக்கை யறைக்குக் கொண்டுபோகப்பட்ட பின் அவளுக்கு வேண்டிய உபசா ரங்களனைத்தும் செய்யப்பட்டன. அவள் சீக்கிரத்திலேயே புத்தி தெளிவடைந்தாள். அதன்மேல் சங்கரதாஸ், சந்திரா பாய், அவள் அத்தை ஜானகியம்மாள், ஜெகநாதன் இவர் களை நோக்கி நடந்தசங்கதி என்னவென்று சாவதானமாக விசாரித்தான்.

அதன்மேல், திடீலென்று வீதியில் ஒரு பெண்ணை இரண்டு துஷ்டர்கள் பிடித்துக்கொண்டு போக முயன்ற தும், இவர்கள் போய் அவளைக் காப்பாற்றி வீட்டிற்குள்

தூக்கி வந்து அங்கேயிருக்கும்படி அவள் கோரியபடி யனுமதி யளித்ததும், பிறகு சந்திராபாய்க்குத் தர்ம சங்கத்திலிருந்து கடிதம் வந்ததும் அப்பெண் கூறிய கதையும் அவளுக்கு ஒரு பெரிய சிப்பம் வந்ததும், யாவும் விவரமாய்க் கேட்டறிந்த சங்கரதாஸ் சந்திராபாயையும் அவள் அத்தையையும் நோக்கி,

"நான் கூறுவதற்காக நீங்கள் மனவருத்த மடையலாகாது. உங்கள் மூடத்தனத்தினுலேயே, முக்கியமாய் சந்திராபாயின் முட்டாள் தனத்தினுலேயே யாவர்க்கும் பிராணுபத்தை வருவித்துக் கொண்டீர்கள். நமது விரோதிகள் மிக்க வஞ்சமும், தந்திரமும், சாமார்த்தியமு முடையவர்களென்றும், அவர்களிடம் எத்தகைய பாபத்திற்கும் அஞ்சாத ஈவிரக்கமற்ற அயோக்கிய ஆடவர்களும் பெண்களும் இருந்து உடந்தையாய் வேலைசெய்கிறுர்களென்றும் நாம் அறிந்தே யிருக்கிறேம். திருஷ்டாந்தமாகப் பன்முறை அவர்களால் ஆபத்துக்குள்ளாக்கப்பட்டு அவதிப்பட்டிருக்கிறேம்.

அப்படி யிருக்கச் சற்றேனும் முன் யோசனையாவது எச்சரிக்கையாவது இல்லாமல் எவளோ வீதியில் யாரிடமோ சிக்கிக்கொண்டதுபோல் அபிநயித்தால், அச்சமயம் அவளைக் காப்பாற்றியதோடு விட்டுவிடாமல் பிறகு அவளை வீட்டில் வைத்துக்கொண்டது மிக்க மூடத்தனம். அவளே கொஞ்ச காலம் இங்கு தங்குவதாகக் கூறியபோதேனும் உங்களில் ஒருவருக்காவது சந்தேகம் ஜனித்திருக்கவேண்டும். அவள் நடக்கைகளையேனும் நீங்கள் கவனித்திருக்க வேண்டும். ஒன்றுமில்லை. யார் எப்படி ஏமாற்றினும் அதற்கெல்லாம் கண்மூடித்தனமாய் உடன்பட்டுப் பிராணுபத்தில் சிக்கிக் கொள்வது புத்திசாலிகளுக் கழகல்ல. வெளித்

தோற்றமான விஷயங்களைக் கண்டு யாவும் உண்மையே யென்று ஒருபோதும் கருதிவிடலாகாது. நாம் முன்பின் பாராத ஆட்களின் வார்த்தையை எடுத்ததே நம்பிக்கொள்ள லாகாது. நமது அனுபவத்தையும் நமது எதிரிகள் நமக்குத் தீங்கிழைக்கச் சதா முயன்றுகொண் டிருக்கிறார்கள் என்ப தையும் நாம் மறக்கலாகாது. இப்போது நீங்கள் உயிரோடு தப்பியது தெய்வ சகாயமேயன்றி வேறில்லை. இனியேனும் எச்சரிக்கையா யிருங்கள். எத்தகைய மனிதராயினும் அவர் களைப் பற்றிய விவரம் சரியாய்த் தெரியுமட்டும் அவர்களை நம்பி யருகிற் சேர்த்துக்கொள்ள வேண்டாம்" என்றான்.

அதன் பிறகு வாதாஸிங் "நீ எப்படி இத்தகைய நெருக்கடியான நிலைமையில் வந்து காப்பாற்றினாய்? நீ எங் குச் சென்றிருந்தாய்? வந்ததே சந்திராபாய் க்ஷேமமா வென்று ஏன் கேட்டாய்?" என்று வினவினான்.

அதன்மேல் சங்கரதாஸ் தனக்கு நேர்ந்த சம்பவங்க ளனைத்தும் விவரமாகக் கூறினான். அதன்பின்பே அங்கு வந்திருந்த கள்ளி விபாங்கன் ஆளென்றும் மற்ற யாவும் அவளால் நடந்த விஷயங்களே யென்றும் யாவர்க்கும் வெளிப்படையாகத் தெரிந்தன. சந்திராபாய் தான்முட்டாள் தனமாய் அந்தக்கள்ளிக்கு உதவி செய்ததாலேயே தனக்கு இத்தகைய பிராணாபத்து நேர்ந்ததென் றுணர்ந்தாள். சந் திராபாய்பட்ட இம்சைகளிலிருந்து சுகமடைய இரண்டொரு வாரங்கள் சென்றன.

## 25-வது அத்தியாயம்

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்து இரண்டு மூன்று வாரங்களாயின. ஒரு நாள் சந்தி ராபாய் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு

கதைப் புத்தகத்தை வாசித்துக்கொண் டிருக்கிறுள். அச் சமயம் மாரி என்ற வேலைக்காரப் பெண் அவளிடம் வந்து "அம்மா! தங்களுக்கு ஒரு சிப்பம் வந்திருக்கிறது" என்று ஒரு நாணயமாகக் கட்டப்பட்ட சிப்பத்தை யவள் எதிரில் வைத்தாள்.

அச் சிப்பம் இரயில் பார்ஸலில் வந்தபடியால் அதைக் கொண்டு வந்தவன் அதற்கு இரசீதை வாங்கிக்கொண்டு போய் விட்டான். அதனுல் அது யாரிட மிருந்து வந்த தென்று அவளுக்குத் தெரியாது. மேல் நாட்டு ஆசாரம் ஒரு பெண்ணின் அழகைக் கண்டு ஒரு ஆடவன் விருப்பங் கொண்டு அவளோடு கொஞ்சம் அறிமுகமானபின் அவளுக்கு மரியாதையாக எத்தகைய பரிசை யனுப்பினுலும் அவள் அதை யங்கீகாரம் செய்து ஏற்றுக்கொள்வது தகுதி யென்பதே

சந்திராபாய்க்கு வந்த சிப்பத்தில் சிவப்பு ரோஜாமலர் களும் வெள்ளை ரோஜா மலர்களு மிருந்தன. ரோஜா மலர் களில் சந்திராபாய்க்கு மிக்க பிரியம். மாரி அப்புஷ்பச் சிப் பத்தை சந்திராபாய் முன் வைத்துவிட்டு அறையைவிட்டு வெளிச் சென்றுள்.

சந்திராபாய் சிப்பத்தை யவிழ்த்து அதிலுள்ள புஷ்பங் களைக் கண்டதே மிக்க மனமகிழ்ச்சி யடைந்தாள். அவற்றை யெடுத்துப் பார்க்கும்போது அப்புஷ்பங்களி னிடையில் ஒரு சிறுகடிதம் இருப்பதைக் கண்டாள். அதைக் கையிலெடுத் ததும், அவள் மனம் சங்கரதாஸ்மேல் சென்றது. அவன் ருன் தன்மேல் வைத்திருக்கும் அன்பால் இப்புஷ்பங்களை யனுப்பியிருப்பான் என்று முதலிலேயே நினைத்தாளாதலின், ஆவலோடு அக்கடிதத்தைப் பிரித்துவாசித்தாள்.

அதை வாசித்ததும் அவள்முகம் பால்போல் வெளுத்து விட்டது. அவள் மனதிலுண்டான வேதனைக்கு ஓர் அள

வில்லை. அக்கடிதம் விபாங்கன் அனுப்பியது. முஷ்டிக்காத் தின் திரண்ட செல்வத்தை அவன் அடையாது போனது முதல் தன் மேலும் சங்கராதாஸின்மேலும் அவன் பூரண மான வஞ்சம் வைத்திருக்கிறனென்று அவளுக்கு நன்ருகத் தெரியும்.

ஆனல் இப்போதந்தத் துஷ்டன் அனுப்பிய கடிதத் தில் பயங்கரமான சங்கதி யடங்கியிருந்தது. அந்தோ! பன் முறை தன் அக்கிரம முயற்சிகளில் தோல்வியடைந்து நற் காலமாய் ஆபத்திற்குத் தப்பியும் அந்த மூடனுக்கு இன்னும் அறிவு விளங்கவில்லை.

அவன் அனுப்பிய பயங்கரமான கடிதத்தை வாசித்த தும் சந்திராபாய் பிரமித்து நின்ருள். அவள் அப்பீதியில் அலறிக் கூவப்போனுள். அதே விநாடி கதவு திறக்கப்பட்ட தும் சங்காதாஸ் நேராக உள்ளே வந்ததும், சந்திராபாயிடம் சந்தோஷமாகப் பேசமுயன்றவன் அவள் முகத்தைக் கண் டதும் வியப்பும் கலவரமுமடைந்து,

"அட! இதென்ன? என்ன சமாச்சாரம்?" என்ருன்.

அச்சமயம் சந்திராபாய் இருந்த மனேநிலையில் அவளால் பேசச் சற்றும்முடியாமல் வந்த கடிதத்தைப் பேசாமல் சங் காதாஸிட மளித்துவிட்டாள். அக்கடிதத்தில்

"முதல்பலி சங்காதாஸ் அல்லது நரைத்தலையுடைய உன் அத்தை இருவரில் யார் என்பதை நீயே தீர்மானித்துக் கொண்டு, உன் காதலனுகிய சங்கரதாஸாயின் சிவப்பு மலர் களையும், கிழவியாயின் வெள்ளை மலர்களையும் உடனே உன் அறையில் தெருப்பக்க மிருக்கும் சாளரத்தில் கட்டாயம் வை" என்றிருந்தது. அடியில் விபாங்கன் குறியாகிய சர்ப் பக்குறி போடப்பட்டிருந்தது.

சங்கரதாஸ் அதை வாசித்துப் பார்த்ததும் ஆழ்ந்த சிந்தனைக்குள்ளானான். ஏனெனில் விபாங்கன் வீண்மிரட்டுக்காரனல்லவென்றும் அவன் கூறுவதைச் செய்தே தீருவானென்றும், சங்கரதாஸ் முன் அனுபவங்களால் நன்றாக அறிவான்.

இத்துஷ்டப்பயல் இப்போது என்ன விதமான புதுச் சதிசெய்யக்கருதுகிறான் என்று சங்கரதாஸ் தனக்குள் சிந்தித்தான். அக்கடிதத்தை வாசித்ததும் அவன் மனதிலுண்டான கலக்கமனைத்தையும் அவன் மிக்க சாமார்த்தியத்தோடு மறைத்துக்கொண்டான்.

சந்திராபாய் மிக்க திகிலடைந்து "அந்தோ! இப்போது என்னசெய்வது?" என்றாள்.

சங்கரதாஸ் நேராகப் பதில் ஒன்றும் கூறவில்லை. அவன் நேராய்ச் சாளரத்தி னருகிற்சென்று வெளியில் வீதியை நோக்கினான். வீதியின் ஒருபக்கம் முடவன் போன்ற ஒரு குட்டையன் வீதியில் செல்கிறவர்களுக்குப் பத்திரிகை விற்றுக்கொண் டிருந்தான். அவனைக் கண்டதும் சங்கரதாஸ் முகத்தைச் சுளித்துக்கொண்டு சற்று சிந்தித்து உடனே சாளரத்திலிருந்து திரும்பித் தன் தலையணியையும் கைக்கோலையும் கரத்தில் எடுத்துக்கொண்டவன் மறுபடி கோலையங்கேயே வைத்துவிட்டு ரோஜாபுஷ்பங்களையெல்லாம் அச்சிப்பத்திலேயே பத்திரமாய் வைத்துவிட்டு சந்திராபாயை நோக்கி "நான் இதைப்பற்றி யுடனே கவனிக்கவேண்டும்" என்றான்.

இருவரும் அங்கிருந்து வெளிக்கூடத்திற்குச் செல்லும்போது சந்திராபாய் "நீ மிக்க ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்" என்றாள்.

சங்கரதாஸ் "ஆம். நான் உன்னைப்பற்றி மிக்க ஜாக்கிரதையாகவே யிருக்கிறேன்" என்றான்.

சந்திராபாய் "அப்படியல்ல. உன்னைப்பற்றிக் கூட நீ மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டும்'' என்றாள்.

இவர்கள் கூடத்தைவிட்டுக் கீழிறங்கிச்செல்லும்போது சங்கரதாஸ் "ஆ! என் கைக்கோலை மறந்துவைத்துவிட்டேன்'' என்று கூறிக்கொண்டே சந்திராபாயை அங்கேயே விட்டு விட்டுப் புத்தகசாலை யறைக்குள் சென்றான். அவன் வேணு மென்றே அங்குத் தனியே செல்வதற்காகவே கைக்கோலை யங்கே வைத்துவிட்டு வந்தான்.

சங்கரதாஸ் புத்தகசாலை யறைக்குள் சென்றதும் அங்கிருந்த ரோஜாமலர்களில் சிவப்புப் புட்பங்கள் சிலவற்றை யெடுத்து ஒருபாத்திரத்தில் வைத்துச்சொருகி அதைச்சாளரத்தில் வைத்துவிட்டுத் துரிதமாய்த் தன் கைக்கோலையெடுத்துக்கொண்டு சந்திராபாய் இருக்குமிடம் வந்துசேர்ந்தான். அவன் அவளை நோக்கி "நீ ஒன்றுக்கும் கலக்கப்படவேண்டாம். என்னைப் பூரணமாய் நம்பு. இவ்விஷயத்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ மிக்க ஜாக்கிரதையாயிரு. போய்வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

சந்திராபாய் அவன் வீட்டைவிட்டு வெளிப்படுமட்டும் பார்த்துக்கொண்டிருந்து விட்டுப் பிறகு தனியாய்ச் சிந்தனை செய்வதற்காகத் துரிதமாய்த் தன் அறைக்குச்சென்றாள்.

* * * * *

வெளியில் வீதியில் பத்திரிகை விற்பவன்போல் பாசாங்கு செய்துகொண்டு உண்மையில் சந்திராபாய் வீட்டின் மேல் கண்ணோக்கம் வைத்திருந்த முடவன் போன்ற குள்ளன் விபாங்கனுடைய வேவு ஆளே. அவன் உண்மையைச் சங்கரதாஸ் அறிந்துகொண்டே சங்கரதாஸ் சிவப்பு ரோஜா மலர்களைச் சாளரத்தில் வைத்தான். அது "முதலில் சங்கர தாஸையே பலியாக வைத்துக்கொள்'' என்று சந்திராபாய்

விபாங்கனுக் கறிவித்தமாதிரியாகும். சங்கரதாஸின் நோக்க மாவது "இப்படிச் செய்தால் இப்பாதகர்கள் சந்திராபாயின் வீட்டருகில் வாாமல் நம்மைக்கொல்ல முயல்வார்கள். நாம் பார்த்துக் கொள்ளலாம்" என்பதே. சங்கரதாஸின் உதார குணமும், பிறருக்காகத் தன் பிராணனையும் தியாகம் செய் யும் கருணை நிறைந்த பெருந்தன்மையும் கவனிக்கத்தக்கது. இத்தகைய நடக்கை யுடையவனுக்குக் கருணாநிதியாகிய பகவான் எப்போதும் உதவிசெய்வார் என்பது இக்கதையா லேயே நிரூபகமாவதைக் காணலாம்.

வெளியில் நின்று பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த முடவன் சந்திராபாய் வீட்டின் சாளரத்தில் சிவப்பு ரோஜா மலர்கள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் துரிதமாய் அந்த விடத்தை விட்டுச்சென்றான். சங்காதாஸ் இவ்வாறு தன் உயிரை யாபத்திற் குள்ளாக்கியது, பாபம்! சந்திரா சற்றும் தெரியாது.

அந்த முடவன் போன்ற கள்ளன் அவ்வீதியைக் கடந்து வேறு வீதியில் திரும்பியதும் முடத்தன்மை யின்றிச் சுறுசுறுப்போடு அதி துரிதமாய் விபாங்கன் இருக்கும் இரகசிய விடத்தை நோக்கிச்சென்றான். அச்சமயம் விபாங் கனும் சங்கும் இன்னும் சில சீனக்காரரும் ஒரு மேஜை யைச்சுற்றி யுட்கார்ந்திருந்தார்கள். அம்மேஜைமேல் ஒரு நீளமான மரப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த இடம் விபாங்கனுடைய இரகசிய அறை. அப்பெட்டி திறக்கப்பட் டிருந்தது. அதன் மேல்மூடியின் உட்பக்கம் மேலே பட்டு நூல் சுற்றப்பட்ட இரண்டு கம்பிகள் பதியப்பட்டிருந்தன. அப்பெட்டியின் இரண்டு கோடிகளிலும் சிறு மின்சார எந் திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றினிடையில் சில கருவிகள் அமைக்கப்பட் டிருந்தன.

விபாங்கன் தன் கரத்தில் ஒரு கைக்கெடியாரத்தின் அளவுள்ள ஒரு உலோகத்தால் செய்த பில்லையை வைத்துக் கொண்டிருந்தான். அதில் பத்துப் பனிரண்டு துவாரங்க ளிருந்தன. அவன் அப்பில்லையை யங்கிருந்த தன் கூட்டா ளிகளாகிய கள்ளர்கள் முன் காட்டி “இதோ இது இந்த வெள்ளையர்கள் கண்டு பிடித்த கருவியே. இதன் மூலமாய் நாம் நமது எதிரிகளுக்குத் தெரியாமல் அவர்களது சம்பா ஷணையையும், அவர்கள் விஷயங்கள் யாவற்றையுமே—எப் போது அவர்களைத் தாக்கலாம்—எங்கே...என்பது முதலிய யாவும் அறிந்து கொள்ளலாம். இதற்குக் கள்ள டெலி போன் என்று பெயர்” என்றதும் தட்டென்று பேச்சை நிறுத்தி விட்டான்.

ஏனெனில் அச்சமயம் ஒரு வேலையாள் உள்ளே வந் தான். அவன் குசுகுசுவென்று விபாங்கன் செவியில் இரண் டொரு வார்த்தைகளைக் கூறியதே, விபாங்கன் ஒருவிதச் சமிக்கையாய் அங்கிருந்தவர்களை நோக்கினுன். அக்கள்ளர்க ளனைவரும் ஒருவிநாடியில் மாயமாய்ப் போய்விட்டவர்கள் போல் அங்கிருந்த திரைகளில் மறைந்து விட்டார்கள்.

விபாங்கன் அவர்கள் மறைந்ததும் வந்த ஆளைநோக்கி “அவனை யுள்ளே யழைத்துவா” என்றான். இரண்டொரு நிமிடங்களில் முடவன்போன்று பாசாங்கு செய்துகொண்டு சந்திராபாய் வீட்டின் அருகிலிருந்த அந்தக் கள்ளப்பயல் உள்ளே வந்து விபாங்கன் முன் நின்றான். விபாங்கன் “ஆ! நீயா? என்ன சங்கதி?” என்றான்.

அக்கள்ளன் வேறொன்றும் கூறாமல் “சிவப்பு ரோஜாக் கள்” என்று மட்டும் கூறினுன். விபாங்கன் “சரி, நல்ல தாயிற்று; நீ போகலாம். மறுபடி நீ வேண்டி யிருக்கும் போது உன்னை வரவழைக்கிறேன்” என்றான். கள்ளன்

"எஜமானே! மிக்க வந்தனம். போய் வருகிறே" ன்என்று கூறிச் சென்ருன். அவன் சென்றதே திரைகளின் பின்ஞல் மறைந்திருந்த கள்ளர்க ளெல்லாம் வெளி வந்தார்கள். விபாங்கன் ஒரு சமாசாரத்திற்கு எதிர்பார்த்துக்கொண் டிருந்தானென்றும் அச்சமாசாரம் வந்து விட்டதென்றும் அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

விபாங்கன் அவர்களை நோக்கி "நீங்கள் யாவரும் என் கூட வாருங்கள்! தாமா! நீ இப்பெட்டியை யெடுத்துக் கொள். இதை மிக்க சாக்கிரதையாய் எடுத்து வரவேண்டும்" என்ருன். இரண்டொரு நிமிடங்களில் விபாங்கன் தன் ஆட்களோடு தன் இரகசியமான வாசஸ்தலத்தி லிருந்து புறப்பட்டான். வீதியைக் கடந்ததும் அக்கள்ளர்கள் இரு வர் மூவராகப் பிரிந்து நகரத்திற்குள் பிரவேசித்தார்கள்.

* * * *

வாதாஸிங் சங்கரதாஸின் இரசாயன சாலை யறைக்கு வந்தவன் சங்கரதாஸ் அங்கில்லா திருந்ததால் பேசாமல் உட்கார்ந்து அவன் வருகைக்காகக் காத்திருந்தான். சுமார் அரைமணி நேரங்கழித்து சங்கரதாஸ் மிக்க கலவரத்தோடும் ஆத்திரத்தோடும் வந்ததைக் கண்ட வாதாஸிங் மிக்க வியப் பும் கலக்கமு மடைந்து, "என்ன கலக்கம்?" என்ருன். சங்கரதாஸ் "நிறையக் கலக்கமே" என்று தன் தலையணியை யும் மேல் சட்டையையும் கழற்றி யெறிந்து விட்டு,

"இப்போது நான் நேர் யுத்தத்திற்கு ஆயத்த மாகப் போகிறேன்." என்று நடந்த சங்கதியைப் பரபரப்பாய்க் கூறிக்கொண்டே இரசாயன ஆராய்ச்சி செய்யும் மேஜை யருகிற்சென்று "எங்கே அந்த வெடியுப்புத் திராவகமும்..." என்றதும், "ஆ! இதோ விருக்கிறது" என்று சில இரசா யன மருந்துகளைக் கலந்து புட்டிகளில் நிரப்பத் தொடங்கி ஞன்.

வாதாஸிங் மிக்க வியப்போடும் மகிழ்ச்சியோடும் தன் நண்பனுடைய சுறுசுறுப்பான வேலையைப் பார்த்துக் கொண்டே நின்றான். சங்கரதாஸ் சில நிமிடங்கள் வரையில் தன் காரியத்தை மிகக் கவனத்தோடு செய்துகொண்டிருந்தான். தன் வேலைமுடிந்ததும் ஒருவிதமான திராவகத்தை யொரு சாதாரண புட்டியிலும் மற்றொன்றை யொருவித மான கருவியிலும் ஊற்றினான்.

அதன் பிறகு சங்கரதாஸ் வெளியில் புறப்பட ஆயத்தப்பட்டு வாதாஸிங்கையும் புறப்படும்படி சமிக்கை செய்து விட்டு அவனை நோக்கி "அதோ நான் உட்கார்ந்திருந்த ஆசனத்திலிருக்கும் ஜமக்காளத்தையும் எடுத்துக்கொண்டுவா" என்றான்.

வாதாஸிங் ஜமக்காளத்தை யிவன் ஏன் எடுத்துவரச் சொல்கிறான் என்று வியப்படைந்து, அவன் கூறியபடி யதை யெடுத்துக்கொண்டு அவன் கூடவே வெளியிலுள்ள கூடத்திற்குச் சென்றான்.

இருவரும் அங்குச் சென்றதே சங்காதாஸ் வாதாஸிங்கை நோக்கி "இந்த ஜமக்காளத்தை யிதோ இந்தக் கதவின் முன் போடு" என்றான். வாதாஸிங் அவன் கூறியபடியே ஜமக்காளத்தைக் கதவின் எதிரில் விரித்ததும் சங்கரதாஸ் தன்னிடமிருந்த புட்டியிலுள்ள திராவகத்தில் பாதியை யதன்மேல் பரவியபடி ஊற்றினான்.

சங்கரதாஸ் மறுபடி இரஸாயனசாலை யறைக்குள் சென்றான். ஆனால் அந்தச் சமக்காளத்தின்மேல் கால்வைக்காமல் அதைத் தாண்டிக்கொண்டு சென்றான்.

## 26-வது அத்தியாயம்

விபாங்கனும் அவன் ஆட்களும் சங்கரதாஸனும் வர தாஸிங்கும் அங்கிருக்கிறார்களாவென்று தெரிந்து கொண்டபின் அவர்களிருக்கும் வீட்டின் அடிவாரத்திற்கு வந்தார்கள். அங்கு ஓர் பாழடைந்த நிலவறையிருந்தது. விபாங்கன் முன்னே அதற்குள் சென்று பார்த்து அதன் பிறகு சங்கையும் மற்ற சீனுக்காரரையும் உள்ளே வரும்படி யழைத்தான். அவர்களில் ஒருவன் நாம் முன்பு கூறிய கள்ளட் டெலிபோன் கருவி யிருக்கும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு சென்றான்.

விபாங்கன் அப்பெட்டியைத் திறந்து அதிலிருந்த கம்பிச்சுருணையைக் கையிலெடுத்துக்கொண்டு நாற்புறங்களிலும் நோக்கினான். ஏனெனில் மேலே சங்கரதாஸின் டெலிபோன் இருக்கும் அறைக்கும் இக்கம்பிக்கும் சம்பந்தமுண்டாகச் செய்யவேண்டும்.

அந்த அறையில் ஒருமூலையில் பெரிய புத்தக அலமாரியொன்றிருந்தது. விபாங்கன் உற்று நோக்கி அந்த இடத்திற்கு நேரேதான் மேலே சங்கரதாஸின் அறை யிருக்கிறதென்று ஊகித்துக்கொண்டான். அவன் உடனே தன்கூடவிருந்தவர்கள் உதவியால் அந்தப் பீரோவின்மே லேறிக் கொண்டு, கீழிருப்பவர்களுக்குச் சமிக்கை செய்தான். அவர்கள் அவன் செய்யும் சமிக்கைகளின்படிக்கு ஒவ்வொரு ஆயுதம் எடுத்துக் கொடுத்துக்கொண் டிருந்தார்கள்.

கடைசியில் மேல் மூலையில் சங்கரதாஸ் அறையின் பக்கச்சுவரில் துளைசெய்து கள்ள டெலிபோனை யங்கமைத்து விட்டுச் சத்தத்தைக் கிரகிக்கும் கருவியையும் மறைவில்

கீழே வைத்துவிட்டுத் தன்காரியம் நிறைவேறியதைக் கண்டு புன்னகை புரிந்துகொண்டே கீழிறங்கினன்.

* * * *

சங்கரதாஸ் வாயிற்படி முன் ஜமக்காளத்தைப் போட்டு அதன் மேல் மருந்தை பூச்சிவிட்டு இரசாயன சாலை யறைக்குள் திரும்பிவந்து சுமார் அரைமணி நேரம் சென்றபின் ஆழ்ந்த சிந்தனையின்மேல் "சே! இன்னமும் சும்மா இருக்கலாகாது. இந்தக் கள்ளப்பயல்களை யெப்படியேனும் அடக்கியே விட வேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். உடனே அவனும் வரதாலிங்கும் அங்கிருந்து புறப்பட்டார்கள். சற்று தூரம் போனபின் சங்கரதாஸ் எதிரிகளைப்பற்றி ஒரு உளவை யறியவும், வரதாலிங் ஒரு வேலை விஷயமாக "நக்ஷத்திரம்" பத்திரிகையின் காரியாலயத்திற்குச் செல்லவும் பிரிந்துவிட்டார்கள்.

சங்கரதாஸ் வரதாலிங்கை விட்டுப் பிரிந்து சற்றுதூரம் சென்றதும் ஜனசஞ்சாரம் அதிகமாக விருக்கும் வீதியில் நுழைந்தான். அங்கிருந்த ஜனக்கூட்டத்தில் ஒரு ஆளின் முகத்தைக் கண்டான். உடனே அவன் மனம் பதைத்தது. சமயோசிதமாகத் துரிதமாய் ஒன்றைச் சிந்திப்பதில் மிக்க சூக்கும புத்தி யுடையவன்; அதோடு தான் அறிந்த ஒரு ஆள் எத்தகைய மாறுவேட மணிந்து வரினும் இன்ன ஆள் என்று தெரிந்து கொள்வான். புதிய ஆள் மாறு வேடமணிந்து வந்தால் பிறகு அவனைக் கண்டால் இவனே அத்தகைய மாறு வேடமணிந்து வந்தவனென்று அறிந்துகொள்வான். ஆகையால அம்முகத்தைக் கண்டதே அந்த ஆள் யாரென் றுணர்ந்து கொண்டான். அந்த ஆள் சந்திராபாய் வீட்டில் பாசாங்கு செய்து வந்து அவளைச் சூத்திர நாற்காலியில் சிக்கவைத்து விடெரியும்படிச் செய்துவிட்டுச் சென்ற கள்ளியாகிய நாகம்மாளே.

அவளைக் கண்டதே சங்கரதாஸ் இன்னது செய்ய வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். அவள் அங்கிருந்து செல்லும்போது, தன்னை யவள் காண வில்லையென்றுணர்ந்து அவள் பின்னால் தொடர்ந்து சென்றான்.

கொஞ்சதூரம் சென்றபின் அவள் ஒரு வீதியில் திரும்பினாள். சங்கரதாஸும் அவ்வீதியின் ஓரத்தில் செல்லும் ஜனங்களில் கலந்துகொண்டு அவள் மேல் பார்வை வைத்தபடி சென்றான். அவள் இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து பிறகு நகர உத்தியான வனத்தில் நுழைந்து, அங்கிருந்து சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்தை நோக்கிச் சென்றாள்.

நாகம்மாள் சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்தில் நுழைந்து ஒரு சிறு வீதியிலுள்ள ஒரு சிற்றுண்டிக் கடைக்குள் நுழைந்தாள். அவள் அங்குச் சென்றதும் ஒரு ஆசனத்திலமர்ந்து தனக்கு விருப்பமான ஒன்றைப் பரிமாறும்படி கூறினாள்.

அவள் அங்குச் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் அக்கடையின் முதலாளியாகிய சாமீ என்ற சீனக்காரன் அவளைப் பார்த்தான். அவன் அவளருகில் வந்து உட்கார்ந்ததும் இருவரும் என்னவோ குசுகுசுவென்று பேசினார்கள். நாகம்மாள் மெதுவாய் "எஜமானன் உள்ளே யிருக்கிறாரா?" என்று கேட்டாள்.

சாமீ "இல்லை. ஆனால் சங்கு மட்டும் அந்த விடத்திலிருக்கிறான்" என்றான். சங்கு இருக்குமிடத்தில் அவன் கூட்டத்தைச் சேர்ந்த எவரும் போலீஸாரிடம் சிக்கிக்கொள்ளாதபடி மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் அதனால் சங்குகூட வேறொரு இடத்தில் பதுங்கிக்கொண்டிருக்கிறான். நாகம்மாளும் சாமீயும் உட்கார்ந்து பேசிக் கொண்டே யிருக்கிறார்கள்.

சங்கரதாஸ் சற்றுநேரம் அக்கடைக்கு வெளியில் நின்றிருந்தவன் உள்ளே செல்வதேசரி என்று தீர்மானித்துக் கொண்டான். அவன் தன் உடைகளைச் சற்றுமாற்றி ஒரு சாதாரண அநாகரீக முரடன்போல் செய்துகொண்டு துணிகரமாக உள்ளே சென்றான். நாகம்மாளும் கடைக்காரனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் சங்கரதாஸ் அவர்கள் அருகிற்சென்று அவர்கள் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு ஒரு ஆசனத்திலுட்கார்ந்து, தேனீர்ப்பானமும் சிற்றுண்டியும் கொண்டுவரும்படிக் கூறினான். சங்கரதாஸ் சிற்றுண்டி யருந்துபவன்போல் அபிநயம்செய்துகொண்டே அவர்கள் பேசுவதைக் கவனித்துக்கொண் டிருந்தான்.

சங்கரதாஸ் அறிந்துகொண்டவரையில் அங்கே ஒரு அறை யிருக்கிறது. அது விபாங்கன் ஒளிக்குமிட மல்லாவிடினும் சங்கு ஒளிந்திருக்கு மிடமாகவாவ திருக்கவேண்டும். ஆனால் தான் அங்கு நெடுநேரமிருப்பது தவறு என்று அவனுக்குத் தெரியும். அவாகள் திடீலென்று தன்னை யறிந்து கொள்ளலாகும். தானோ தனியாகத் துணையின்றி யிருக்கிறான். அவன் ஒருமுறை யம்மாதிரி தனியாய் அகப்பட்டுக்கொண்டு தப்பியது தெய்வவருளாய் விட்டது. ஆகையால் யாவும் சிந்தித்துத் தான் அருந்திய உணவிற் களிக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு வெளிச் சென்றான்.

அந்த விடத்தை விட்டுப் புறப்பட்ட சங்கரதாஸ் உத்தியான வனத்தின் பக்கத்திலிருந்த ஒரு வீதிக்குச் சென்று, அங்கிருந்த ஒரு மருந்துக் கடைக்குள் நுழைந்து அதில் தாபிக்கப்பட் டிருந்த டெலிபோன் மூலமாய்ப் பேசத் தொடங்கினான். அங்கு அவன் தனக்கு அவசியமான சமயங்களில் அவ்வாறு பேசுவது வழக்கம். சங்கரதாஸ் அந்த

டெலிபோன் மூலமாய்த் தன் இரசாயனசாலை யறையி லிருக்கும் வரதாஸிங்குக்குப் பின் வருமாறு கூறினான்:—

"நீ போய் உடனே யாலசியம் செய்யாமல் சீனனை யிங்கனுப்பு அவன் சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்தில் வேவு பார்க்கவேண்டிய வேலை கொஞ்சமிருக்கிறது. அதன் பின் நான் போலீஸ் படையை யழைக்கவேண்டி யிருக்கும். ஆகையால் அவர்களுக்கு அதைப்பற்றி எச்சரிக்கை செய்து ஆயத்தமாக விருக்கும்படி கூறு. சீனனை யிங்கு உடனே யனுப்பு" என்று தான் இருக்கும் இடத்தை யின்னதென்று அறிவித்தான்.

சீனன் என்பவன் துப்பறியும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவன். மிக்க புத்தி சாதுரியமும் தந்திரமும் உடைய வன். சங்கரதாஸ் சமாசாரம் அனுப்பிய சற்றுநேரத்திற்கெல் லாம் சீனன் சங்கரதாஸிடம் வந்து சேர்ந்தான். சங்கரதாஸ் உடனே அவனாலாகவேண்டிய வேலை யின்னதென்று கூறி னான். இருவரும் உடனே சீனக்காரர் வசிக்கும் பிரதேசத் திற்குச் சென்றார்கள்.

அங்கு சென்றதும் சங்கரதாஸ் கள்ளர் ஒளிந்திருக்கும் சிற்றுண்டிக் கடையை யவனுக்குக் காட்டி, "இதோ இது தான் இடம். நாகம்மாள் என்பவள் இதற்குள்தா னிருக்கி றாள். இதிலிருந்து அக்கள்ளர் ஒளிந்து மறைந்திருக்கும் இடங்களுக்கு வழி செல்கின்றது. அந்த வழியையும் இடத் தையுமே நீ கண்டுபிடிக்க வேண்டும்" என்றான்.

சீனன்:—"அப்படியே செய்கின்றேன். என்னு லானதை நான் செய்தே தீருவேன் சங்கரதாஸ்! நீ ரதைப்பற்றி ஐயுறவேண்டாம்" என்றான்.

சங்கரதாஸுக்குச் சீனனுடைய தந்திர சாமார்த்தியங்களில் மிக்க நம்பிக்கையுண்டு; ஆகையால் அவன் சீனனிடமிருந்து விடைபெற்றுச் சென்றான். சீனன் கடைசியாகச் சங்கரதாஸ் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டதும், அக்கடைக்குள் சென்று ஒரு ஆசனத்திலுட்கார்ந்தான்.

சீனன் நாகம்மாளும் ஹோட்டல் காரனாகிய சாமீயும் பேசிக்கொண் டிருந்ததைக் கவனித்துக்கொண் டிருந்தான். கடைசியில் நாகம்மாள் எழுந்து வீதியின்பக்க மிருக்கும் வாயிற்படியை நோக்கிச் சென்றாள். சீனன் முன்னாடியே தான் வாங்கிய சிற்றுண்டிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டான். ஏனெனில் அவன் எச்சமயத்தில் வேண்டுமாயினும் அங்கிருந்து புறப்பட ஆயத்தமாயிருக்கவேண்டும் என்றே யப்படிச் செய்தான்.

நாகம்மாள் வெளி வாயில் வழியாய்ச் சென்றாள். சாதாரணமாய்ப் பார்ப்பவர்களுக்கு அவள் அவ்வீட்டை விட்டுப் போய்விடுவது போலவே தெரியும் ஆனால் அவளோ அங்கிருந்த வழியாக வெளிப்பட்டுச் சற்று தூரம் சென்று அதே கட்டிடத்திற்குள் செல்லும் இன்னொரு வழியாக உள்ளே சென்றாள். அதைக்கண்ட சீனன் சற்று நிதானித்தான். நாம் உள்ளே செல்லலாமாவென்று சிந்தித்தான்.

அதற்குள் நாகம்மாள் அந்த வாயிற்படியில் நுழைந்து படிகளில் ஏறி அப்படிகளின் தலைப்பில் இருக்கும் கதவில் ஒருவிதமான சமிக்கையோடு தட்டினாள். அதாவது முதலில் கெட்டியாக ஒரு முறை தட்டுவது—உடனே யாராவது யார் என்று கேட்டால் பிறகு இருமுறைக் கெட்டியாகவும் அதன்பின் மும்முறை மெதுவாகவும் தட்டுவது.

அவ்வாறு சமிக்கையாய்த் தட்டினதும் சங்கு வந்து

கதவைத் திறந்தான். அவன் அவளைக் கண்டதும் மிக்க வந்தனமென்று உபசரித்தான்.

யாவும் அறிந்துகொண்ட சீனன் சீக்கிரத்தில் தான் எப்படி நடக்கவேண்டுமென்பதைத் தனக்குள் சிந்தித்துக் கொண்டான். அவன் வீதியில் வீணாகத் திரிந்துகொண்டிருந்தால் யாரேனும் ஐயப்படுவார்கள். அச்சமயம் அவனுக்கு அனுகூலமானதாகவேயிருந்தது. நாகம்மாள் வெளிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து கதவைமூடித் தாளிட்டுக் கொண்டாள். ஆனால் அத்தாள் சரியாய் விழவில்லை. அவசரத்தில் அவள் அதைக் கவனிக்கவில்லை.

சீனன் மெதுவாக உள்ளே சென்று உள் வாயிற்படியருகில் நின்று மெதுவாகக் கதவைத்திறக்க முயன்றான். அது உட்பக்கம் நன்றாகத் தாளிடப்பட்டிருந்தது. அங்கு வரிசையாகக் கதவுகளிருந்தன. சீனன் ஒவ்வொன்றி னருகிலும் நின்றும் உற்றுக்கேட்டான். கடைசியில் ஒரு கதவருகில் நின்று கேட்டபோது உள்ளே யிருவர் பேசும் சத்தம் கேட்டது. அவர்கள் மெதுவாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவன் மெதுவாய்க் கதவைக் கொஞ்சம் திறக்க முயன்றான். கதவு பூட்டப்பட் டிருந்தது.

அக் கதவின் மேற்பக்கம் காற்று செல்வதற்காகத் தாராளமாய் நான் கைந்து அங்குல அகலம் சந்து விடப்பட்டிருந்தது. சீனன் கதவின் கைப்பிடிமேல் மெதுவாகக் கால்வைத்தேறி அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

உள்ளே நாகம்மாளும் சங்கும் மிக்க சிரத்தையோடு பேசிக்கொண் டிருக்கிறார்கள். நாகம்மாள் தன் போர்வையைக் கழற்றிவைத்துவிட்டு உட்கார்ந்திருக்கிறாள். சங்கு சீட்டா அடிக்கும் மருந்தைப் பக்குவப்படுத்தி யவள் பிடிப்பதற்காகக் குழாயில் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறான்.

சீனன் தான் மேலேறியபடியே மெதுவாகக் கீழிறங்கி அந்த விடத்தைவிட்டு ஒருவரும் தன்னைக்காணுதபடி வெளிப்பட்டு விட்டான்.

* * * *

சீனனை வேலையில் விட்டுவிட்டுச் சங்காதாஸ் தன் இரசாயனசாலை யறைக்குச் சென்ருன். வாதாஸிங் "கட்சத்திரப்பத்திரிகை" யாலயத்திற்குச் சென்றுத் தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு இரசாயனச்சாலை யறைக்குத் திரும்பி வந்தான் அப்போது தான் சங்காதாஸ் அங்கு திரும்பி வந்து சேர்ந்தான்.

சங்காதாஸும் வாதாஸிங்கும் விவகாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே யிருக்கையில் யாரோ வந்து கதவைத் தட்டினர்கள். சங்காதாஸ் போய்க் கதவைத் திறந்ததும் சீனன் உள்ளே வந்தான்.

அவன் இவர்களை நோக்கி ஆத்திரத்தோடு "நான் அந்தக் கள்ளரின் மறைவிடத்தைக் கண்டுகொண்டேன். அது அந்தச் சிற்றுண்டிக் கடையின் பின்பக்கமே யிருக்கிறது. அதே கட்டிடத்திலுள்ள இன்னெரு வழி யங்குச் செல்கிறது. நான் அந்த விடத்தின் வாயிற்படி யருகில் மட்டும் சென்று சங்கும் அந்த நாகம்மாள் என்பவளும் சீட்டா அடிக்க ஆயத்தமாகும் சமயத்தில் அவர்களைக் கண்டேன்." என்ருன்.

சங்காதாஸ் சீனனை நோக்கி, "நேர்த்தியான வேலை" என்று கூறிவிட்டு டெலிபோனி லிருக்கும் பேசுங்கருவியை யெடுத்து, போலீஸ் பிரதம ஸ்தலத்தைக் கூப்பிட்டான். அங்கிருந்து பதில் வந்ததும், "13-வது இலக்கப் போலீஸ் ஸ்டேஷனேடு நான் பேசவேண்டும்" என்ருன்.

சங்கரதாஸ் மிக்க மனப்பதைப்போடு காத்துக்கொண் டிருந்தான். சற்றுநேரத்திற்குள் 13-வது இலக்கப் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் "என்ன சங்கதி? யார்?" என்று கேட்டான்.

சங்கரதாஸ்:—"நான் சங்காதாஸ். நான் சற்று நேரத் திற்குமுன் உன்னிடம் வந்து, நான் ஒரு முக்கியமான விஷ யத்தைக் கண்டுபிடிக்க ஒரு உளவின்மேல் செல்வதாகக் கூறினேனல்லவா. அதைக் கண்டுபிடித்து விட்டேன். அந்த இடம் சீனக்காரர் பாளையத்தில் இருக்கும் சாமீ என்பவன் சிற்றுண்டிக்கடை. அக்கட்டிடத்தின் பக்கத்தில் இருக்கும் வாயிற்படி வழி செல்ல வேண்டும். உடனே போய் அதைச் சோதித்தால் யாவும் அகப்படும். உடனே செய்" என்று கூறினன்.

அதன்பின் சங்கரதாஸ் வாதாஸிங்கை நோக்கி "வாதா ஸிங் நீயும் சீனனும் எனக்கு உதவிசெய்யவேண்டிய சமயம் இதுதான். எழுந்துவாருங்கள்" என்றான்.

இவர்கள் அங்கிருந்து புறப்படும்போது போலீஸ் காரி யாலயத்தில் ஆட்கள் யாவரும் ஆயத்தமாகி வண்டியிலே றிப் புறப்படுகிறார்கள். சங்காதாஸ், வாதாஸிங், சீனன் மூவ ரும் இரசாயன சாலையை விட்டுத் துரிதமாய்ச் சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்தை நோக்கிச் செல்கிறார்கள்.

இவர்கள் ஒருவண்டியிலேறிச் சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்தில் நுழையும்போது போலீஸ்காரர் வண்டியும் அங்கே வந்து சேர்ந்தது. யாவரும் ஏககாலத்தில் அக்கள் ளர் இருந்த கட்டிடத்தின் பக்கத்திலிருக்கும் கதவருகில் போய்ச் சேர்ந்தார்கள். போலீஸாரில் இருவர் உடனே கத வின்மேல் மோதி அதைத் திறந்துகொண்டு உள்ளே இருந்த

அந்தக்கடையின் முதலாளியாகிய சாமியைப் பிடித்துக் கொண்டார்கள்.

மற்றவர்கள் அங்கிருந்து மேல் மாடிக்குச் செல்லும் படிகளி னெதிரிலிருந்த கதவை யுடைத்து மேலேறிச் சென்றார்கள். அங்கு இருந்த தாழ்வாரத்தில் இரண்டு மூன்று கதவுக ளிருந்தன. துப்பறியும் போலீஸ்காரனாகிய சீனன் ஒரு கதவைச் சுட்டிக்காட்டி "அதோ அதோ அந்தக் கதவு. அதேயதே" என்றான்.

அக் கதவும் பூட்டப்பட் டிருந்தது. ஆனால் இரண்டொரு நிமிடங்களில் அக் கதவும் உடைக்கப்பட்டு போலீஸார் எதற்கும் ஆயத்தமாய் உள்ளே பாய்ந்தார்கள். ஆனால் அங்கும் யாரும் இல்லை. அறை காலியா யிருந்தது. அவர்கள் மிக்க வியப்போடும் வெறுப்போடும் அறையின் நாற்புறங்களிலும் பார்க்கையில் வாதாஸிங் ஒரு புறம் சுவரில் எதையோ கண்டு இதோ இதோ இதைப்பாருங்கள்! என்றான். அங்கு சுவரில் "வாடகைக்கு விடப்படும்" என்று எழுதப்பட் டிருந்தது.

அது போலீஸார் தங்களைப் பிடிக்க வந்து ஏமாந்து போனதைப் பற்றி அவர்களைக் கேலி செய்வதற்காகவே விபாங்கன் ஆட்கள் அந்த வார்த்தைகளை யெழுதி வைத்தார்கள். அது உண்மை யென்பதற்கு அத்தாட்சியாக அவ்வார்த்தைகளின் கீழ் விபாங்கன் குறியாகிய பாம்புக் குறி போடப்பட் டிருந்தது. போலீஸார் ஜெயமடையாத காரணம் என்ன?

---

## 27-வது அத்தியாயம்

சங்கரதாஸ் போலீஸாரைச் சோதனைக்காக வரும்படி டெலிபோன் கொடுக்கும்போது விபாங்கனும் அவன் ஆட்களும் கள்ளட் டெலிபோனி னருகில் நின்று கொண்டிருந்தார்கள். சங்கரதாஸ் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் அவன் கேட்டுக்கொண்டான். அவ்வார்த்தைகளில் ஏதேனும் தெரியாவிட்டால் ஒருவனல்லாவிடின் மற்றொருவன் அதன் அர்த்ததைக் கூறினான்.

விபாங்கன் தன் ஆட்களில் ஒருவனை நோக்கி "நீ யுடனே நமது ஆசாமிக ளிருக்கு மிடத்திற்குச் செல்லவேண்டும்" என்றான். தாமன் என்ற அவன் முன்னமே சங்கரதாஸ் டெலிபோனில் கூறிய சங்கதிகள் யாவும் கேட்டான். ஆதலின் அவனுக்கு அதிகமாகக் கூறவேண்டியது ஒன்று மேயில்லை. அவன் உடனே யதைவிட்டுப் புறப்பட்டு அதிவேகமாக ஓடினான்.

நாகம்மாளும் சங்கும் சீட்டாப்புகைப் பிடிக்க ஆரம்பித்துக் கொஞ்சநேரமே யாயிற்று. அச்சமயம் யாரோ தங்களுக்குள்ள இரகசியக் குறிப்பாய்க் கதவைத் துரிதமாகத் தட்டும் சத்தம் கேட்டது. சங்கு உடனே சென்று கதவைத் திறந்தான். தாமன் மிக்க ஆத்திரத்தோடு உள்ளே யோடி வந்து,

"எஜமான்...தெரிந்து கொண்டார்...ஆம்—போலீஸார்—சோதனை...இங்கு வருகிறார்கள்...சீக்கிரம்" என்று மூச்சு திணறிக்கொண்டே கூறினான்.

அதைக் கேட்டதே சங்கு மிக்க பீதியடைந்துவிட்டான். அச்சமயம் நாகம்மாள் சீட்டா மயக்கத்தால் கண்

கள் சொருகிக்கொண்டு உறங்குந் தருவாயி லிருக்கிறாள். சங்கு அவள் தோளைப்பிடித்துக் குலுக்கி "எழுந்திரு, சீக்கிரம்" என்றான்.

அவள் நித்திரையி லிருந்து மிரண் டெழுந்தவள்போல் திகிலோடு "என்ன? என்ன?" என்றாள். சங்கு அவள் தோளைப்பற்றி இழுத்துக்கொண்டே சென்று கதவை மூடிப் பூட்டிக்கொண்டு கீழிருக்கும் இரகசிய வழிக்குச் செல்லும் கதவைத் திறந்து, தாமன் உதவியால் அந்த அறையிலிருந்த ஜமக்காளம் படுக்கையாவற்றையும் துரிதமாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு அங்கிருந்து வெளிப்பட்டு விட்டான்.

இம்மாதிரியாய் விபாங்கன் சங்கரதாஸின் வீட்டில் வைத்த கள்ள டெலிபோனால், சங்கரதாஸின் முயற்சிகள் பயன்படாவண்ணம் செய்து தன் ஆட்கள் சிக்காமல் தப்பித்துக்கொள்ளுமாறு செய்தான்.

* * * *

சந்திராபாய்க்கு இரோஜா புஷ்பங்கள் அனுப்பப்பட்ட பின் சங்கரதாஸ் அவள் வீட்டைவிட்டு வந்து விட்டானல்லவா. அவன் சென்ற நெடுநேரங்கழித்தே சந்திராபாய் தன்னறையை விட்டு புத்தகசாலை யறைக்குச் சென்றாள். அவள் நினைவு முழுமையும் அப்புட்பங்கள் மேலும் அவற்றைப்பற்றி விபரங்கன் வரைந்த கடிதத்தின் மேலுமே யிருந்தது. ஆகையால் மாரியும் ஜகநாதனும் அச்சமயம் அங்கிருப்பதை யவள் முதலில் கவனிக்கவில்லை.

சந்திராபாய் அந்த அறைக்குள் சென்று தன் பகற் கனவு போன்ற சிந்தனையை விட்டு அறையை யுற்று நோக்கியதும் முன்னே சாளரத்தில் வைக்கப்பட் டிருந்த சிவப்பு ரோஜாமலர்களின் மேலேயே யவள் திருஷ்டி வீழ்ந்தது. அதன் அர்த்தம் "நீ முதலில் சங்கரதாஸையே யென்ன

வேண்டுமாயினும் செய்துகொள்ளென்று நாம் விபாங் கனுக்குக் கூறியதாகிறது'' என்று அவள் மனதிற் பட்டதும் அவள் மனம் துடித்துவிட்டது. ஒரு யோசனையுமின்றி யுடனே பாய்ந்து போய் முன்னே யந்தப் புஷ்பம் வைத் திருந்த பாத்திரத்தையே யெடுத்து கீழே வீசி யுடைத் தெறிந்துவிட்டாள்.

அவள் செய்கையைக் கண்ட ஜகநாதனும் மாரியும் பிர மித்து பீதியோடு அவளை நோக்கினார்கள். சந்திராபாய் கோபத்தணல் கண்களில் ஜொலிக்க அவர்களை நோக்கி "இப் புஷ்பங்களை யார் அங்கே வைத்தது?'' என்று கேட்டாள்.

பாபம் அவர்களிருவர்க்கும் அதைப்பற்றியொன்றுமே தெரியாது. அவர்கள் என்ன பதில் கூறுவார்கள்? அச் சமயந்தான் சந்திராபாயின் அத்தையாகிய ஜானகியம் மாளும் அந்த அறைக்குள் வந்தாள். அவளுக்கும் அதைப் பற்றி யொன்றும் தெரியாது.

சந்திராபாய் மிக்க மனக்கலக்க மடைந்து "அய்யோ! நான் போய் உடனே சங்கரதாஸைப் பார்க்கவேண்டும். இதற்குள்ளாகவே என்ன நேர்ந்திருக்குமோ என்ன தெரி யும்'' என்று துரிதமாகச் சென்று தன் மேற் போர்வையை யெடுத்தணிந்துகொண்டாள்.

* * * *

சீனுக்காரர்களாகிய கள்ளர்களைப் பிடிக்கச் சென்று தவறி வந்துவிட்ட சங்கரதாஸும் வரதாஸிங்கும் சங்கு விபாங்கன் இருவரில் ஒருவரையேனும் பிடிக்காமற் போன தைப் பற்றி மிக்க மனவேதனையோடு தங்கள் வாசஸ்தலத் திற்குத் திரும்பினார்கள். போலீஸார்களை நாம் அழைத்துப் போய் அவர்களுக்கு அவமானமுண்டாகும்படி செய்துவிட்

டோமே என்பது சங்காதாஸ் மனதில் ஒரு பக்கம் வேதனை யாகவே யிருக்கிறது. ஆயினும் அதைவிட அக்கள்ளப் பயல்களால் நாம் ஏமாற்றப்பட்டோமே என்பதே அவ னுக்கு மிக்க மனக்கொதிப்பை யுண்டாக்கியது. அது அவன் மனதிற்கு மிக்க வேதனையை யுண்டாக்கியது.

அவன் முன்னடி சீனனை யனுப்பி அவர்கள் அங்கிருக் கிறார்களென்று தெரிந்து கொண்டே எல்லா ஏற்பாடுகளை யும் செய்தான். சீனனைக் கேட்டபோது அவன் "நான் சத் தியமாய் நாகம்மாள் சங்கு இருவரையும் அங்கு கண்ணாக் கண்டேன்" என்கிறான். அவன் வார்த்தையில் சந்தேகம் கொள்ளக் காரணமேயில்லை. அவன் பார்த்தது உண்மையா யிருக்கும்பட்சத்தில் அவர்கள் பிறகு அதைவிட்டு ஓடிவிட் டிருக்கவேண்டும். அப்படியாயின் அவர்களுக்கு எப்படிப் போலீஸார்கள் வருகிறார்களென்ற சங்கதி தெரிந்திருக்க வேண்டும். எப்படித் தெரிந்திருக்கலாம்?

போலீஸாரில் யாரேனும் போய் முன்னடிக் கூறிவிட் டிருப்பார்களோ வென்று சிந்திக்கவும் வழியில்லை. ஏனெ னில் அவ்வளவிற்கு அவகாசமில்லை. எப்படி யிருந்தாலும் அவர்கள் சங்கதி தெரிந்து கொண்டே எச்சரிக்கையாய்விட் டார்கள் என்பது மட்டும் நிச்சயம். அவர்கள் அறையில் சென்று உட்கார்ந்ததும் சங்காதாஸ் சற்று சிந்தித்து முகத் தைச் சுளித்தபடி வரதாஸிங்கை நோக்கினான்.

வரதாஸிங் பரிதாபமாய்ச் சங்காதாஸ் முகத்தை நோக்கி னான். திடீலென்று அவன் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. வரதாஸிங் அவனை நோக்கி "அவர்கள் என்ன செய்தார்களென்று நீ........." என்பதற்குள் சங்கா தாஸ் "வாய் பேசாமலிரு" என்று அவனுக்குச் சமிக்கை காட்டிவிட்டு வாயால் பதில் ஒன்றுங் கூறாமல் ஒரு கடிதத்

தில் "இங்கு எங்கேயோ ஒரு கள்ள டெலிபோன் வைக்கப் பட்டிருக்கவேண்டும். நீ சாதாரண சங்கதிகளைப் பற்றிப் பேசிக் கொண்டே யிரு—நான் எங்கு கள்ள டெலிபோன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்கிறேன்" என்றான்.

வரதாஸிங் அவ்வாறே ஏதோ சாதாரண விஷயங்களைப் பற்றிப் பேசுகிறவன் போல் பேசிக்கொண்டே யிருந்தான். சங்கரதாஸ் அங்கிருந்த மேஜைகள், அலமாரிகள், பீரோக்கள், நாற்காலிகள், மற்றச் சாமான்கள், யாவற்றையும் அப்புறம் இழுத்து அவற்றின் கீழும் பின் புறங்களிலும் எங்கும் தேடிப் பார்த்தான். எந்தவிடத்திலும் உளவு அகப்படவில்லை.

கடைசியில் சங்கரதாஸ் தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்த ஒரு சிறு எந்திரத்தை யெடுத்தான். அதில் இரண்டு கம்பிச் சுருணைகளிருந்தன. சங்கரதாஸ் அதை யொரு மின்சார எந்திரத்தில் பொருத்தி வேலை செய்யத் தொடங்கினான். பிறகு அக்கம்பியில் ஒன்றை யெடுத்துக் கொண்டு அதன் நுனியைப் பலவிடங்களில் காட்டிக் கொண்டே சென்றான். ஒரு இடத்தில்—பலகை தைக்கப்பட்டவிடத்தில்—அக்கம்பியின் முனை பட்டதும் ஒருவிதமான சத்தம் எந்திரத்திலுண்டாயிற்று. சங்கரதாஸ் உடனே அப்பலகையில் கம்பிபட்ட இடத்தில் வட்டமான ஒரு குறிபோட்டான்.

யாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த வரதாஸிங் "ஓகோ! இப்பலகையின் பின்பக்கந்தான் கள்ளடெலிபோன் வைக்கப்பட்டிருக்கிறது" என்று உணர்ந்துகொண்டு உடனே அப்பலகையை யுடைத்து அக்கள்ள டெலிபோனைக் கண்டு பிடித்துவிடலாம் என்று கருதி அவ்வாறு செய்யக் கரத்தை நீட்டினான். ஆனால் சங்கரதாஸ் தட்டென்று அவன் கரத்தைப் பற்றித் தடுத்துவிட்டான். பிறகு ஒரு கடிதத்தில்

"பேசாமலிரு. இங்குதான் அக்கள்ள டெலிபோன் வைக்கப் பட்டிருக்கிறது. ஆயினும் அதை வெளிப்படுத்த இது சமய மல்ல" என்று எழுதினான்.

அச்சமயம் தான் சந்திராபாயின் வண்டி வீட்டெதிரில் வந்து நின்றதும் அவள் வண்டியை விட்டிறங்கிப் பாய்ந்து உள்ளே வந்தாள். சங்கரதாஸ் உயிரோடிருப்பதைக் கண் டதே அவளுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அவள் மிக்க ஆத்திரத்தோடு, "ஹா! நீ க்ஷேமமாகவே யிருப் பதைக் காண நான் மிக்க சந்தோஷம்—" என்று கூறத் தொடங்கியதே சங்கரதாஸ் சட்டென்று "ஒன்றும் பேச வேண்டாம்" என்று அவளுக்கு மிக்க கண்டிப்பான சமிக்கை செய்தான்.

அதைக் கண்ட சந்திராபாய் பிரமித்து மரம்போல் நின்று விட்டாள். சங்கரதாஸ் உடனே ஒரு கடிதத்தில் "நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் கள்ள டெலிபோன் மூலமாய் நமது எதிரிகளுக்குக் கேட்கிறது. நான் பேசும் வார்த்தைகளில் நீ சற்றும் வியப்படையாதே. இச்சமயம் மேலுக்குப் பொய்யாய் அப்படிப் பேசவேண்டி யிருக் கிறது" என்று எழுதினான்.

அதன் பின் சங்கரதாஸ் அக்கள்ள டெலிபோன் வைத் திருக்குமிடத்தி னருகிற் சென்று அதன் மறுபுறமிருக்கும் கள்ளர்க்கு நன்றாகக் கேட்கவேண்டுமென்றே, "வாதாஸிங்! நான் ஒரு வேலையாய் இரசாயனசாலைக்குச் செல்லவேண்டும் நீ சந்திராபாயை யழைத்துக்கொண்டுபோய் வீட்டில் விட்டு விடு" என்றான்.

வாதாஸிங் "ஆகா, தடையென்ன? அப்படியே செய் கிறேன்" என்றான்.

இரண்டொரு நிமிடங்களில் அவர்களனைவரும் சாதாரண விவகாரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே அங்கிருந்து புறப்பட்டார்கள். சங்கரதாஸ் மட்டும் கதவை மூடிக்கொண்டு வெளி வாயிற்படியின் முன் போடப்பட்டிருக்கும் ஜமக்காளத்தின் மேல் முன்பு ஊற்றிய மருந்தை மறுபடி நன்ருய் ஊற்றிவிட்டு அந்தப் புட்டியையும் இன்னொரு புட்டியையும் ஜேபியில் வைத்துக்கொண்டு ஜமக்காளத்தை மிதிக்காமல் தாண்டிக் கொண்டு வெளிப்பட்டான்.

வரதாஸிங் சந்திராபாயை வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்ருன். சங்கரதாஸ் கால் நடையாகவே அங்கிருந்து புறப்பட்டான்;

சங்கரதாஸின் புத்தி சாதுரியத்தைக்கண்ட வரதாஸிங் மிக்க வியப்படைந்து விட்டான். சந்திராபாய் ஒருவாருக மட்டும் விஷயங்களை யூகித்துக்கொண்டாளேயன்றி விவகாரம் இருக்கும் நிலைமை யின்னதென்று அவளுக்குப் பூரணமாகப் புலப்படவில்லை. அவள் மனதிலிருக்கும் விஷயத்தை யங்கு வெளியிடக்கூடவில்லை. ஆனல் சங்கரதாஸின் விவகாரங்களனைத்தும் தக்க காரணத்தோடேயே நடக்குமென்றும், யாவும் தன் க்ஷேமத்திற்கே யென்றும், அவற்றின் விவரம் இப்போது தெரியாவிடினும் சீக்கிரத்தில் யாவும் தெரியுமென்றும் நன்ருயறிவாள்.

* * * *

சங்கரதாஸனும் மற்றவர்களும் பேசிக்கொண்டிருக்கையில் கள்ள டெலிபோன் அருகிலிருந்து விபாங்கன் யாவும் கேட்டுக்கொண்டே யிருந்தான். சங்கரதாஸ் கள்ள டெலிபோனைத் தேடிக்கொண்டிருக்கையில் விபாங்கன் மனதில் கலவரமுண்டாயிற்று. அவன் செவியில் ஒரு சங்கதியும்விழாவிடினும் சந்தடி யில்லாதிருந்ததே யவனுக்குப் பீதியை

யுண்டாக்கிவிட்டது. குற்றமுள்ள நெஞ்சிற்கு எப்போதும் பீதியுண்டாவது சுபாவமேயன்றோ? கள்ளன் மனதிற்கு ஒருபோதும் நிம்மதி கிடையாது. எந்த சமயத்தில் நம்மை யறியாமலே நாம் சிக்கிக்கொள்வோமோ என்றபீதி எப்பொழுதும் அவன் மனதில் குடிகொண்டே யிருக்கும்.

விபாங்கன் கலக்கத்திலிருக்கையில் சங்கு வந்து போலீஸார் சோதனை செய்ய வந்து ஏமாந்துபோன சங்கதியைக் கூறினன். அதைக்கேட்டதே விபாங்கன் மனதில் மிக்க மகிழ்ச்சி யுண்டாயிற்று. அவர்களனைவரும் மிக்க உன்னிப்பாய்க் கவனித்துக்கொண் டிருந்தார்கள். அச்சமயந்தான் சந்திராபாய் சங்கரதாஸைக் காண வந்தாள். சங்கரதாஸ் வாதாஸிங்கிக்குக் கட்டளையிடும்போது அக்கள்ளர் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

சீனக்காரர்களனைவரும் சங்கரதாஸ் முதலியவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டதை யறிந்த பின்பே சமாசாரம் வரும் குழைகளைத் தங்கள் செவிகளினின்றும் எடுத்தார்கள். சங்கு அவர்களில் ஒருவனை நோக்கி "அவர்கள் மெய்யாகவே போகிறார்களா பார்த்து விட்டு வா!" என்றான்.

அந்தக் கள்ளன் உடனே வெளி வந்து ஒரு மறைவிடத்தில் நின்று வாதாஸிங்கும் சந்திராபாயும் வண்டியில் ஏறிச் சென்றதைக் கண்டான் பிறகு சங்கரதாஸ் செல்வதைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு விபாங்கனிடம் சென்று "எஜமானே அவர்கள் எல்லாரும் போய்விட்டார்கள்" என்றான்.

விபாங்கன் மிக்க சந்தோஷமடைந்தவனாய் புன்னகை புரிந்து சங்கை விளித்து அவனிடம் ஒரு சிறு மருந்துப் புட்டியையும் ஒரு சாவியையுமளித்து, "என்ன செய்ய வேண்டுமென்பது தெரியுமல்லவா?" என்றான் சங்கு "ஆகா, தெரியும் எஜமானே" என்றான்.

விபாங்கன் "சரி, சீக்கிரம் நடக்கட்டும்" என்றான். விபாங்கன் அவ்வாறு கூறியதே சங்கு கீழிருந்து படிகளிலேறி மேலே யிருக்கும் சங்கரதாஸின் அறையை நோக்கிச்சென்று விபாங்கன் கொடுத்த சாவியால் அதன் கதவைத்திறந்தான். அப்படித் திறக்கும்போது வாயிற்படியின் முன் சங்கரதாஸ் போட்டிருக்கும் ஜமக்காளத்தை மிதித்துக் கொண்டு சற்று நேரம் நின்றான்.

அதன் பிறகு மெதுவாகக் கதவைத்திறந்து உள்ளே சென்றான். ஒரு நிமிடம் அறையின் நாற் புறங்களிலும் நோக்கினன். அறை காலியாக விருந்தது. அதன் பின் அவன் மெதுவாய் நடந்து அங்கிருந்த மேஜை யருகிற் சென்று அதன் மேலிருக்கிற வஸ்துக்களை யுற்று நோக்கினன். அங்கு சங்கரதாஸின் சுங்கானும் இருந்தது.

சுங்கானைக் கண்டதே சங்கின் கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. கடைசியில் அச்சுங்கானை யெடுத்து தான் கொண்டு வந்த சிறு புட்டியிலிருக்கும் மருந்தைச் சுங்கான் குழாய் நுனியில் சுற்றித் தடவிவிட்டு அதை மேஜை மேல் இருந்த விடத்தில் வைத்து விட்டான். சுங்கானில் அவன் மருந்தைத் தடவிய பாகந்தான் வாயில் வைத்துப் பிடிக்கும் பாகம். அந்தக் கொலை பாதகத்தை யுண்டாக்கும் வேலையைச் செய்து விட்டுத் துரிதமாக அங்கிருந்து வெளிப்பட்டான்.

*　　*　　*　　*　　*

வரதாஸிங்கும் சந்திராபாயும், சந்திராபாயின் வீடு போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்த சற்று நேரத்திற்குள் சங்கரதாஸிடமிருந்து ஒரு சமாசாரம் வந்தது.

அவர்களிருவரும் சந்திராபாயின் வீட்டிற்குச் சற்று தூரத்திலுள்ள ஒரு இடத்திற்கு வந்து உடனே தன்னைச் சந்திக்கும்படி தெரிவித்தான். அவர்களிருவரும் அவ்வாறே

சென்றபோது குறித்த விடத்தில் சங்கரதாஸனும் சீனனும் மூன்று நான்கு போலீஸ்காரர்களு மிருந்தார்கள்.

சங்கரதாஸ் தன் கூட விருப்பவர்களை நோக்கி "இன்னும் பத்து நிமிடங்களில் நீங்கள் என் இடத்தைச் சோதிக்க வேண்டும். நான் இன்னும் மூன்று நிமிடங்களில் அங்கு போய்ச் சேர்வேன்" என்றான்.

சந்திராபாய் "அய்யோ நீ போகவேண்டாம். நாங்கள் வருவதற்குள் உனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால்......" என்று கூறிக்கொண்டிருக்கையிலேயே சங்கரதாஸ் துரிதமாய்ப் போய்விட்டான். அவன் தன் அறைக்குச் சென்று கதவைத் திறந்ததும் ஜேபியிலிருந்த கைத்துப்பாக்கியைக் கரத்தில் ஆயத்தமாய்ப் பிடித்துக்கொண்டு அறைக்குள் நோக்கினான். உள்ளே ஒருவருமில்லை. அதன் மேல் உள்ளே நுழைந்தான்.

சங்கரதாஸ் நாற்புறங்களிலும் நோக்கினான். வெளித்தோற்றத்திற்கு யாவும் முன் இருந்தது போலவே காணப்பட்டன. அவன் மறுபடி வாயிற்படி யருகிற் சென்றான். அங்கிருந்த ஜமக்காளத்தின் மேல் மட்டும் காலை வைக்காமல் ஜாக்கிரதையாயிருந்தான். தன்னிடமிருந்த ஒருவித திராவகத்தையெடுத்து ஜமக்காளத்தின் மேல் நன்றாகத் தெளித்துவிட்டுக் குனிந்து பார்த்தான். இரண்டொரு விநாடிகளில் ஜமக்காளத்தின் மேல் காலடிகள் பட்ட விடங்களில் சிவப்பு நிறமாக அடிகள் அப்படி யப்படியே புலப்பட்டன. இவ்வாறு கால் அடிகளைக் கண்டுபிடிக்கும் சூழ்ச்சி சங்கரதாஸாலேயே கண்டு பிடிக்கப்பட்டது.

சங்கரதாஸ் உடனே தன் பூதக்கண்ணாடியை யெடுத்துக் காலடிகளைப் பார்த்து அவை சங்கின் காலடிகளே யென்று தெரிந்து கொண்டான். அதன் பிறகு அக்கண்

ணுடியின் உதவியில் சுலபமாகவே அறைக்குள் இருந்த சங்கின் காலடிகளைத் தொடர்ந்து சென்றான். சற்று நேரத்திற்குள் சங்கு அறைக்குள் நுழைந்த பின் நேராக மேஜையருகிற் சென்று அங்கு நின்றிருந்து மறுபடி நேராகத் திரும்பி வெளியிற் போய்விட்டான் என்று தெரிந்துகொண்டான்.

ஆகையால் அவன் மேஜைமேலிருந்த வஸ்துக்களில் எதையோ தொட்டிருக்கவேண்டும் என்றுதெரிந்தது. சீனக்காரரின் வேலை யவனுக்கு நன்றாகத் தெரியும் ஆகையால் இங்குள்ள வஸ்துக்களில் எதில் பாஷாணம் முதலியவை தடவினால் நமக்குத் துரிதமாய்க் கெடுதியை யுண்டாக்கலாகும் என்று சிந்தித்தான். உடனே அங்கிருந்த சுங்கான் மேல் அவனுடைய மன நாட்டமும் கண்ணோட்டமும் வீழ்ந்தன.

உடனே சுங்கானை யெடுத்து அதன் குழாய் நுனியை முகர்ந்து பார்த்தான். அதில் சக்கி முக்கிக் கல் தேய்த்தால் உண்டாகும் நாற்றம் போன்ற நாற்றம் இருந்தது. நம்மையன்றி வேறு யாரோ இதில் கை வைத்திருக்கிறார்கள் என்று உணர்ந்து பூதக்கண்ணாடியில் சுங்கான்குழாயின் நுனியைச் சோதித்து அதில் இன்ன பாஷாணம் தடவப்பட்டிருக்கிறதென்று அறிந்துகொண்டான். அவன் அதைப் பத்திரமாய்க் கீழே வைத்துவிட்டான்.

சங்கரதாஸ் சற்று நேரம் சிந்தித்தான். கடைசியில் அவன் மனதில் ஒரு யோசனை யுதித்தது. அவன் மனதில் உடனே உறக்க முண்டாயிற்று. அவன் உடனே கள்ள டெலிபோன் வைக்கப்பட்டிருக்கு மிடத்தினருகிற் சென்றதும் மறுபக்க மிருப்பவர்களுக்கு நன்றாகக் கேட்கும்படியாய் "போலீஸ்! உதவி உதவி! எனக்குப் பாஷாணம்......"

என்றதும் தடாலென்று வீழ்பவன்போல் சுவரின் மேல் கரங்களால் மோதியடித்தான்.

* * * *

கீழ் அறையிலிருந்த சீனக்காரர் அறுவரும் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினார்கள். விபாங்கன் உடனே மேலேயிருந்த கள்ள டெலிபோனைச் சட்டென்றெடுத்துக் கொண்டு, தன் ஜேபியிலிருந்த ஒரு கடிதத்தை யெடுத்துச் சங்கினிடம் கொடுத்து "இதோ இதை யெடுத்துக்கொள்." என்றான்.

சங்கு அதை வாங்கிக்கொண்டு பார்த்ததும் மிக்க சந்தோஷமடைந்தான். ஏனெனில் அதில் விபாங்கன் குறிகயாகிய நாகக் குறி யிருந்தது. உடனே அதன் அர்த்தம் வஞ்சம் தீர்த்துக் கொள்வதில் ஜெயமடைந்தோம் என்ற குறியென நன்குணர்ந்தான்.

சங்கு உடனே இன்னொரு சீனக்காரனைக் கூட அழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். இதற்கிடையில் சங்கரதாஸ் அறையில் உற்றுக்கேட்டுக்கொண் டிருந்தவன் தன் அறையை நோக்கிச் சங்கு முதலியவர்கள் வருவதை யுணர்ந்து அங்கிருந்த ஒரு பெரிய நாற்காலியில் படுத்துச் சாய்ந்து கொண்டு பிராணன் நீங்கும் தறுவாயிலிருக்கும் மனிதன் போல் அபிநயம் செய்துகொண் டிருந்தான்.

## 23 - ம் அத்தியாயம்.

இதோடு சங்கரதாஸாகிய நமது பகைவன் ஒழிந்தான் என்று பூரண சந்தோஷத்தோடு சென்ற சங்கு தன் உதவியாளாகிய சீனுக்காரனை வாயிற்படியில் நிற்கச் செய்து அச்சமின்றி யுள்ளே நுழைந்தான்.

சங்கு மெதுவாகவே ஏறக்குறைய சவமாய் விட்டான் என்று தான் எண்ணிய சங்கரதாஸினருகிற் சென்றான். இப்போது சங்கரதாஸ் மடிந்தான் என்று அக்கூட்டத்தாரனைவரும் நம்பிக்கொண்டார்கள். அப்படி யிருக்கச் சங்கு விபாங்கன் குறிபோட்ட கடிதத்தை யெடுத்துக்கொண்டு அங்கு ஏன் வந்தான் எனில், தங்கள் வஞ்சத்தால் அவன் மடிந்தான் என்று யாவரும் அறியும்படி அந்த நாகக்குறியை யவன் தேகத்தின் மேல் ஒட்டிவிடுவதற்கே சங்கு அங்குச் சென்றான்.

அந்தக் கடிதம் சங்கரதாஸ் மேலிருப்பதைக் கண்டால் போலீஸ் படை முழுமையும் "அடடா! இப்படிப்பட்ட பிரக்யாதிபெற்ற துப்பறியும் ஆளே விபாங்கன் வஞ்சத்தால் மடிந்தானென்றால் நாம் அவனுக்கு எம்மாத்திரம்" என்று யாவரும் அஞ்சிவிடுவார்கள் என்பது விபாங்கன் எண்ணம்.

சங்கு தன்கூட வந்த ஆளை வாயிற்படியில் நிற்கவிட்டு தான் கொண்டுவந்த கடிதத்தைச் சங்கரதாஸின் சவத்தின் மேல் ஒட்டிவைப்பதற்காக அருகிற் சென்று கரத்தை நீட்டினான்.

அச்சமயம் சங்கரதாஸ் கண்களை மூடிக்கொண்டு சவம்போல் அபிநயம் செய்துகொண் டிருக்கிறான். சங்கு

கடிதத்தைக் கரத்தில் பிடித்துக் கொண்டு கரத்தை நீட்டியதும் சங்கரதாஸ் ஒரு கரத்தால் சங்கைப் பிடித்துக்கொண்டு மறு கரத்தால் தன் ஜேபியிலிருந்த துப்பாக்கியையெடுத்து வாயிற்படியிலிருக்கும் சீனுக்காரனைச் சுட்டான். அவன் பொத்தென்று கீழே விழுந்தான்.

மறுவிநாடி சங்கும் சங்கரதாஸனும் பயங்கரமாகப் போராடத் தொடங்கினர்கள். ஆயினும் இரண்டொரு விநாடியில் போர் முடிவிற்கு வந்துவிட்டது. எப்படியெனில் சங்கரதாஸ் தான் புதிதாய்க் கண்டுபிடித்த ஒருவிதமான கைவிலங்குகளைத் தன் ஜேபியிலிருந்தெடுத்து மிக்க சாமார்த்தியமாய்ச் சங்கின் கரங்களில் மாட்டிவிட்டான். அந்த விலங்கு எவ்வளவு தூரம் நெருக்கினுலும் நெருங்கும் சங்கரதாஸ் அதைச் சற்று நெருக்கியதே சங்கு அதனுலுண்டாகும் இம்சையைப் பொறுக்கமுடியாமல் "போதும், போதும். நான் ஒன்றும் செய்யவில்லை" என்று அலறினன்.

வாயிற்படியில் கீழே வீழ்ந்த சீனுக்காரன் இரண்டொரு விநாடிகளில் சற்று சமாளித்தெழுந்து கீழிறங்கிச் சென்று மிக்க தடுமாற்றத்தோடு விபாங்கன் முன் போய் வீழ்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு "ஓ! சங்கரதாஸ்—சாகவில்லை...." என்ருன்.

அந்தப் பெயரைக் கேட்டதே விபாங்கள் முதலியவர்களுக்கு மிக்க பயங்கரமான அபூர்வசக்தி வாய்ந்த ஒரு துஷ்ட தேவதையின் பெயரைக் கேட்டதுபோல் இடி விழுந்தது. அங்கிருந்த மற்ற மூன்று சீனுக்காரர்களும் முகத்தில் பயங்கரமான விகாரமடைந்து இரண்டு மூன்றடிகள் பின்னிடைந்தார்கள்.

அதைக் கண்ட விபாங்கன் மிக்ககோபமடைந்து அவர்களை நோக்கித் தன் கரத்தைத் தூக்கியதும் அவர்கள் கரு

டனைக் கண்ட நாகங்கள் போல் ஒடுங்கி ஒரு புறம் நின்றார்கள்.

விபாங்கன் சங்கோடு கூடச் சென்று திரும்பி வந்த சீனக்காரனை நோக்கி "அங்கே அவன் கூட இன்னும் யாரேனு மிருக்கிறார்களா?" என்று கேட்டான்.

துப்பாக்கிக் குண்டால் காயமடைந்த சீனக்காரன் வாயாற் பேசமுடியாமல் சமிக்கையாய் அங்கு யாருமில்லை யென்று காட்டினான். விபாங்கன் "சரி, இன்னும் நமக்கு அவகாசமிருக்கிறது" என்று அங்கிருந்த தன் ஆட்களுக்கு இரண்டொரு வார்த்தைகள் சுருக்கமாகக் கூறி யவர்களை யழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

அறையிலிருந்த சங்கரதாஸ் தான் விலங்கிட்டிருக்கும் சங்கை யுற்றுநோக்கிக்கொண் டிருக்கையில் வெளியிலிருந்து ஆட்கள் வரும் சத்தத்தைக் கேட்டுத் துரிதமாக வாயிற் படியை நோக்கிச் சென்றான். ஆனால் அவன் செல்வதற்குள் விபாங்கனும் அவன் ஆட்களும் வாயிற்படியில் வந்துவிட்டபடியால் அவர்களைத் தடுத்துக் கதவை மூட அவகாசமில்லை.

ஆகையால் சங்கரதாஸ் வாயிற்படி யருகிற்சென்றதும் தன் கைத் துப்பாக்கியாற் சுட்டான். உடனே முன்னே வந்த சீனக்காரன் கீழே வீழ்ந்தான். இன்னொரு சீனக்காரன் பாய்ந்து சங்கரதாஸை நோக்கி வந்தான். சங்கரதாஸ் அவனைப் பிடித்துத் தூக்கி விபாங்கனை நோக்கி அவன் மேல் வீசி யெறிந்தான்.

சங்கரதாஸ் அத்தகைய அபூர்வமான சாமார்த்தியம் காட்டுவான் என்று சீனக்காரர் சற்றும் கருதியிருக்கவில்லை. அவர்கள் பீதியடைந்து பின்னிடைந்தார்கள். சங்கரதாஸ் உடனே கதவை மூடிப் பூட்டிக்கொண்டான்.

சினக்காரர் பின்னிடைந்தாலும் சற்று நேரத்திற்குள் அவர்கள் ஒன்று சேர்ந்து கதவைத் தாக்கித் திறக்க முயன்றார்கள். சங்கரதாஸ் கதவிலிருந்த இலைகளினிடையில் சுட்டுக்கொண்டே யிருந்தான்.

* * * *

சங்கரதாஸ் தங்களைவிட்டுப் பிரிந்து சென்றபிறகு, வரதாஸிங், சந்திராபாய், போலீஸ்காரர் முதலியவர்கள் பத்து நிமிடங்கள் வரை பொறுத்து அதன் பின் அங்கிருந்து புறப்பட்டுச் சங்கரதாஸின் அறையை நோக்கித் துரிதமாக வந்தார்கள். அவர்கள் அதிவேகமாய் அந்த வீட்டின் எதிரில் வந்தபோது,சங்கரதாஸின் அறையிலிருந்து துப்பாக்கி வெடிகள் கிளம்புவதைக் கேட்டதும், அடடா நாம் சமயத்தில் வந்தோமோ இல்லையோ வென்று கலக்கமடைந்தார்கள். சினன் மிக்க ஆத்திரப்பட்டான். ஆனால் வரதாஸிங் சாந்தமாய்க் கவனித்துக் காரியத்தை நடத்தினான்.

இவர்கள் வீட்டிற்குள்பாய்ந்து சென்றபோது விபாங்கனும் அவன் ஆட்களும் சங்கரதாஸ் அறையின் முன் நின்று கதவை யுடைத்து உள்ளே நுழையும் தறுவாயிலிருக்கிறார்கள். அவர்கள் சங்கரதாஸைப்பிடிக்க சமயம் தப்பிவிட்டது. அவ்வாறே வரதாஸிங் முதலியவர்கள் விபாங்கன் முதலியவர்களைப் பிடிக்கவும் சமயம் சற்று மிஞ்சிவிட்டது.

ஏனெனில் விபாங்கன் முன்னே வந்த போலீஸ்காரன் மேற் பாய்ந்து அவனை வீழ்த்திவிட்டு ஓடிவிட்டான். அவன் வேறு அறைக்குள் நுழைந்து அதன் கதவை மூடி யுட்பக்கம் தாளிட்டுக் கொண்டு அங்கிருக்கும் வழியாய்க் கீழிறங்கிச் சென்றான். புது ஆட்களாகிய போலீஸ்காரருக்கு அவன் எந்த வழியாகச் சென்றான் என்று புலப்படவில்லை.

வரதாஸிங் சங்கரதாஸ் அறையின் கதவைத் தட்டி "சங்கரதாஸ் - திற ! நான் வரதாஸிங். நாங்கள் வந்துவிட்

டோம்'' என்ருன். கதவு உடனே திறக்கப்பட்டதும் இவர்கள் ஆவலோடு உள்ளே சென்ருர்கள். அங்கு சங்கு கடைசியில் கரங்களில் விலங்கு மாட்டப்பட்டு வாடிய முகத்தோடு உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள்.

யாவரும் உள்ளே சென்றதும் சந்திராபாய் சங்கரதாஸின் இருகரங்களையும் பற்றிக் கொண்டு "ஹா! கடைசியில் நீ யிவனைப் பிடித்துவிட்டாய்" என்ருள்.

சங்கரதாஸ் "ஆம். நீ க்ஷேமமாக விருப்பதே எனக்கு மிக்க சந்தோஷம். இந்த முக்கியமான விஷமக்கள்ளன் அகப்பட்டு விட்டான். ஆயினும், இவனுக்குத் தலைவனுகிய பெரிய கள்ளன் சிக்காமற் போய்விட்டிருக்கிருன்'' என்ருன்.

இப்போது மிக்க தந்திரசாலியாகிய சங்கு சிக்கிக்கொண்டான்; ஆனல் தலைவனுகிய விபாங்கன் இருக்கிற வரையில் இக்கள்ளக்கூட்டம் ஒழியாது. அவனுக்கு சுப்பையாபிள்ளையின் பெரும்புதையலை யிழந்துவிட்ட மனவெரிச்சல் சற்றும் அடங்கவில்லை. அப்புதையலைச் சங்கரதாஸே சந்திராபாய்க்காகக் கைப்பற்றிக்கொண்டான் என்று அவன் நன்ருக அறிவான். அற்ப மனிதர்க்குள்ள சுபாவ குணம்போல் "அப்புதையல் போனல் போகட்டும். அதை யபகரித்துக்கொண்டவர்கள் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும்'' என்ற எண்ணமே அவன் மனதில் பூரணமாக வேரூன்றி விட்டிருந்தது. அத்தகைய அற்ப குணமுடைய அயோக்கியர்கள் முடிவில் பயங்கரமான துன்பத்திற்கே யாளாவார்கள் என்பதற்கு இந்தச் சங்கு, விபாங்கன் இருவரையுமே போதுமான திருட்டாந்தங்களாக வைத்துக்கொள்ளலாம் என்பது போகப்போக விளங்கும்.

விபாங்கன் தான் சிக்காமல் தப்பியது தம்பிரான் புண்ணியமென்று தன் வரையில் தப்பித்துக்கொண்டு ஓடி

விட்டான். இத்தகைய அயோக்கியர்கள் ஆபத்தில் தங்களுக்கு உதவியாக விருப்போரைக் காப்பாற்ற ஒருபோதும் முன் வந்து நிற்கமாட்டார்கள். சங்கரதாஸ் தன் அறையில் தனியாக விருக்கிருனென்றறிந்ததே தன் கூடவிருந்த ஆட்கள் உதவியால் அவனைப்பிடித்துக் கொன்று விடலாம் என்று கருதியே அப்பாதகன் அவர்களை யழைத்துக்கொண்டு துரிதமாய் வந்தான்.

சங்கரதாஸ் ஒருவனைச் சுட்டு வீழ்த்தி மற்றவனைக் காயப்படுத்திய பின்னும், கதவை யுடைத்து உள்ளே சென்று சங்காதாஸைப் பிடித்துக் கொள்ளலாம் என்று கருதினுன். ஆனுல் போலீஸார் சங்கரதாஸுக்கு உதவியாக வந்து விட்டதைக் கண்டதே தன் ஆட்கள் எக்கதியானுலும் ஆகட்டுமென்று தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

* * * * *

விபாங்கன் தன் ஆட்களிலெல்லாம் முதன்மையானவனும், மிக்க நம்பிக்கையும் தந்திர சாமார்த்தியமும், தன் போன்றே எத்தகைய கொலை பாதகத்திற்கும் அஞ்சாத கடின சித்தமுமுடையவனுமாகிய சங்கு என்ற தன் முதன் மந்திரியை யிழந்து விட்டதால் அவன் மனதிலுண்டான வேதனைக்கு ஓர் அளவேயில்லை. அவனுக்கு உணவிலும் நித்திரையிலும் மனம் செல்லவில்லை. அன்றிரவே தன் வலக்கை போன்ற நண்பனுகிய சங்குக்கு இடையூறு செய்தவர்கள் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்வதைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கினுன். சங்கரதாஸ் எவ்வளவு சாமார்த்தியமாய் இவனுடைய வஞ்சகச் சூழ்ச்சிகளிலிருந்து தன்னையும் சந்திராபாயையும் தப்புவித்துக் கொண்டானே அவ்வளவிற்கவ்வளவு விபாங்கனுக்குச் சங்காதாஸ்மேல் கோபம் அதிக

மாயிற்று. ஆகையால் இன்னும் படுமோசமான ஆபத்து களை யவர்களுக்குண்டாக்கத் தீர்மானித்துக் கொண்டான்.

அக்கிரமங்களை மனங் கூசாது செய்து திருப்தியடையும் அயோக்கியர்களுக்குக் கடவுள் சிந்தனையிருப்பது துர்லபம். கடவுளிடம் நம்பிக்கையும் பக்தியுமிருந்தால் அவர்கள் மனம் சுத்தியடைந்து நல்வழியிற் றிரும்பிவிடுவார்க ளல்லவா? பல ஜென்மங்களில் செய்த கெட்ட கர்மமாகிய மாசு அவர்கள் மனதில் அதிகமாகப் படிந்திருப்பதால் "எங்கும் நிறைந்த ஒரு கடவுள் நமக்குள்ளாகவே யிருந்து நமது ஒவ்வொரு சிந்தனையையும் உணர்ந்து கொண்டிருக்கிறார். அவர் அக்கிரமஸ்தர்களின் தீய எண்ணங்கள் நிறைவேற வொட்டாமற் செய்வார். பிறகு அவர்களுக்குத் தக்க தண்டனையும் விதிப்பார்" என்ற எண்ணமே அவர்களுக்குதிப்பதில்லை. ஆகையால் விபாங்கன் மறுபடி சங்கரதாஸுக்கும் சந்திராபாய்க்கும் கெடுதி செய்யத் தொடங்கினன்.

விபாங்கன் தங்கள் நாட்டிலிருந்து கள்ளத்தனமாய் அபினி மருந்து வரவழைத்து இந்திரபுரியிலிருக்கும் தங்கள் நாட்டார்களாகிய சீனக்காரர்களுக்கெல்லாம் இரகசியமாக விற்பனை செய்கிறான். அதனால் அவர்களெல்லாம் இவனுக்கு அடிமைகள் போலிருக்கிறார்கள். அவர்கள் உதவியிருக்கும் தைரியத்தாலேயே அவன் இத்தகைய காரியங்களைச் செய்யத் துணிந்தான் என்று கூறலாம்.

சந்திராபாயிடம் மோட்டார் வண்டி யோட்டுபவன் ஜம்புசாமி என்ற ஒரு வாலிபன். அவன் அப்போது தான் வண்டி விட்டிருக்கப்படும் இடத்திற்கு வந்து வண்டியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அவன் தன் வேலையை யுன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்ததால் அச்சமயம் கள்ளப்பயலாகிய விபாங்கன் வெளியிலிருந்து ஒரு சிறு

சாளரத்தின் வழியாய் வண்டியிருக்கும் அறைக்குள் நோக்கிக் கொண்டிருப்பதை ஜம்புசாமி பார்க்கவில்லை.

விபாங்கன் வழக்கம்போல் தனியாக வரவில்லை. அவன் தன் மனதில் வைத்திருக்கும் கொடுமையான எண்ணத்தை நிறைவேற்றத் தனக்குதவியாக ஒரு நண்பனைக் கூட அழைத்துக்கொண்டான். ஆனால் இச்சமயம் மிக்க நாணயமாக உடையணிந்தவனும், மிக்க யோக்கியனாகக் காணப்பட்டவனுமாகிய ஒரு வாலிபனை யழைத்துச் சென்றான்.

ஜம்புசாமி தன் மோட்டார் எந்திரத்தை யுன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே யிருக்கையில் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டதும், விபாங்கனும் அவன் கூட வந்த சின்னப்பன் என்ற ஆளும் உள்ளே வந்தார்கள். அவர்கள் சற்றும் சந்தடி செய்யாமற் பூனைகள் போல் வந்தபடியால் ஜம்புசாமி அவர்கள் வருவதை யறியவில்லை.

சின்னப்பன் தன் கரத்தில் ஒருவிதச் சூத்திர முக மூடியை வைத்துக்கொண்டிருந்தான். இருவரும் உள்ளே நுழைந்ததும் சின்னப்பன் சட்டென்று தன் கையிலிருந்த முக மூடிச்சீலையை ஜம்புசாமியின்மேல் போட்டதும் விபாங்கன் அவன் மேல் ஒரு கயிற்றை வீசிச் சுற்றிவிட்டான். ஜம்புசாமி நகர முடியாமல் சத்தமிட முடியாமல் சிக்கிக் கொண்டான்.

அதே சமயம் முன் ஏற்பாட்டின் படி ஒரு மூடுவண்டி அந்த விடத்திற்கருகில் வந்து நின்றது. விபாங்கனும் சின்னப்பனும் தன்னைக் காத்துக்கொள்ளும் சக்தியை யடியோடிழந்து விட்ட ஜம்புசாமியைப் பிடித்துப்போய் அவ்வண்டியில் ஏற்றிக்கொண்டார்கள். சின்னப்பன் சாரதியின் பக்கல் உட்கார்ந்து கொண்டான். விபாங்கன் வண்டியி னுட்பக்கம் ஜம்புசாமிக்குக் காவலாக அவன் பக்கத்திலுட்கார்ந்து கொண்டான்.

அத்துஷ்டர்கள் ஜம்புசாமியை விபாங்கனுடைய இரகசிய அறைக்குக் கொண்டுவந்து சேர்த்தபின் அவன் தங்கள் சதியாலோசனைப்படி நடக்க ஒப்புக்கொள்ள வேண்டுமென்று பலவிதமாய் அவனுக்கு ஆசை வார்த்தைகள் கூறி மயக்க முயன்றார்கள். ஜம்புசாமியோ தன் எஜமானியாகிய சந்திராபாயிடம் உண்மை விசுவாசமும், நன்றியும், நீதி தவருத நடக்கையு முடையவன். ஆகையால் அவன் விபாங்கனுடைய மாய ஜாலங்களுக்கெல்லாம் மயங்க வில்லை. விபாங்கன் "சரி, இந்த இரவு முழுமையும் உனக்கு அவகாசம் கொடுக்கிறேன். நன்ருகச் சிந்தித்துக்கூறு. முதலாவது உனக்கு ஆபத்து வராமல் பார்த்துக்கொள்" என்ருன்.

மறுநாட் காலையில் இரண்டு சேனக்காரக் கள்ளர் அவனைப் பலவந்தமாய் விபாங்கன் முன் இழுத்து வந்து நிறுத்தினர்கள். விபாங்கன் கட்டளைப்படி அக்கள்ளர்கள் அவனையொரு நாற்காலியில் உட்காரச் சொன்னர்கள். அவன் மறுத்து விட்டான். அக்கள்ளர் அவனைப் பலவந்தப்படுத்தி விபாங்கனுக் கெதிரிலுள்ள நாற்காலியில் உட்காரவைத்தார்கள்.

விபாங்கன் "அதோ எழுதும் கருவிகளிருக்கின்றன. நான் கூறுகிறபடி எழுதி உன் க்ஷேமத்தைக் காப்பாற்றிக் கொள்" என்ருன்.

ஜம்புசாமி, "என் மனச்சாட்சிக்கு ஒவ்வாத காரியத்தை யொருபோதும் செய்யேன்" என்று துணிகரத்தோடும் தீரத்தோடும் கூறினன். விபாங்கன் "நீ செய்யமாட்டாயா?" என்ருன்.

ஜம்புசாமி இல்லையென்ருன். அதன்மேல் விபாங்கன் தன் மடியிலிருந்த ஈட்டியைக் காத்திலெடுத்து அதன் முனையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே அங்கிருந்த கள்ளப்

பயல்களை நோக்கித் தன் பாஷையில் என்னவோ கூறினன். அவர்கள் உடனே ஜம்புசாமியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு குனிய வைத்து அவன் சிரசைக் குனியச் சாய்த்துப் பிடித்துக்கொண்டார்கள்.

விபாங்கன் "ஒரு விநாடி உன் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள். என் விருப்பத்திற்கு மாருக நடப்பவர்கள் கதி இதுதான்'' என்ருன்.

அந்தோ! இவ்வுலகத்தில் எள்ளளவு சுகமுமின்றிப் பெருங் கஷ்டத்தையும் தீராத வியாதியையும் அனுபவிக்கும் ஒரு பிராணிக்குக் கூட உயிர் என்ருல் விடமுடியாத இனிப்பான வஸ்துவல்லவோ? அப்படியிருக்க நல்ல யௌவன வயதிலுள்ளவன், இனிமேல் உலக போகங்களை யெல்லாம் அனுபவிக்க எதிர்பார்த்திருப்பவனுகிய ஒருவனுக்கு இப்படி அநியாயமாய்ப் பிராணனைத் தத்தம் செய்துவிட மனம் துணியுமோ? தைரியம் உதிக்குமோ? ஒருபோதுமில்லை.

ஆகையால் ஜம்புசாமி இப்பாபிகள் தன்னைக் கொன்றுவிடப் பின்னிடையார்கள் என்று உணர்ந்ததும் அவன் தைரியம் குலைந்து ஆவியொடுங்கி விட்டது. அவன் நிலைமையை யறிந்த விபாங்கன்,

"அதோ பேனவும் கடிதம் முதலியவைகளும். பேனவை யெடுத்துக்கொண்டு நான் கூறுகிறபடி எழுது'' என்ருன். ஜம்புசாமி கனவில் நடப்பவன்போல் அத்துஷ்டன் கூறியபடி வரைந்து கையொப்பமிட்டான்.

தான் எழுதியது இன்னதென்று உணர்ந்ததே இச் சண்டாளர்கள் நமது எஜமானியாகிய சந்திராபாய்க்கு ஏதோ தீங்கு செய்யப் போகிருர்களென்று அறிந்துகொண்டான். அதைச் செய்ய அவனுக்கு எள்ளளவு பிரியமு

மில்லை. பிராணனுக்குப் பயந்தே செய்தான். அதே சமயம் "ஓ ஆண்டவனே! நான் என் மனச்சாட்சிக்குச் சற்றும் சம்மதமில்லாது செய்த இக்காரியத்தால் உத்தமியாகிய அந்தச் சந்திராபாய்க்கு ஒரு தீங்கும் நேராத வண்ணம் தாங்கள் அவளைப் பாதுகாக்க வேண்டும்" என்று தனக்குள் பிரார்த்தித்துக் கொண்டான்.

---

## 29-ம் அத்தியாயம்

சந்திராபாயின் வீட்டில் சந்திரபாயும் அவள் அத்தையும் தங்கள் மோட்டார் சாரதி நெடுநேரம் வராததைப் பற்றி வியாகூலமடைந்தார்கள். ஏனெனில் அவர்கள் காலையில் வெளியில் செல்லக் கருதியிருந்தார்கள்.

சற்று நேரங் கழிந்து ஜகநாதன் ஒரு வாலிபனை யழைத்துக் கொண்டு வந்து அவர்கள் முன் நிறுத்தி "அம்மா! இவ் வாலிபன் ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறான். இதனால் நமது ஜம்புசாமி ஒரு அசௌகரியத்தால் வரவில்லையென்று தெரியும்போலிருக்கிறது" என்றான்.

வந்த வாலிபன் ஒரு கடிதத்தைச் சந்திராபாயிடமளித்தான். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது:—

"மரியாதைக்குரித்தாகிய சந்திராபாயம்மாளுக்கு,—

"நான் கடந்த இரவு இங்கிருந்து புறப்பட்ட பின் பெரிய தீவிலிருந்த என் சகோதரியைக் காணச் சென்றேன். வழியில் நான் ஏறிச் சென்ற குதிரைவண்டி குடங்கவிழ்ந்து விட்டது. நான் நற்காலமாய் மிக்க அபாயமின்றித் தப்பித்துக் கொண்டேன். ஆனால் என் வலது கரம் கணுக்கையில் அதிகமாக நரம்பு பிசகி மிக்க கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். வைத்தியர் நான் பூரண சுகமடைய ஐந்தாறு

நாட்களாவது செல்லும் என்கிறார். இக்கடிதம் கொண்டு வரும் சின்னப்பன் என்ற என் நண்பர் நான் வருமட்டும் உங்களுக்குத் திருப்திகரமாய்ச் சாரதி வேலையைச் செய்வார். ஆகையால் நான் சுகமடைந்து வருந்தனிலும் அவரை வைத்துக் கொள்ளக் கோருகிறேன். இப்படிக்கு ஜம்புசாமி.''

சந்திராபாய் அக்கடிதத்தை வாங்கி வாசித்துப்பார்த்து மிக்க பரிதாபமடைந்து "அய்யோ பாவம்! ஆயினும் அது அவ்வளவு அதிக துன்பமானதல்லவே?'' என்று சின்னப்பனைக் கேட்டாள்.

சின்னப்பன் "மிக்க வருத்தமானதே தான் அம்மா'' என்றான்.

ஜீவாம்பாள் அவனை நோக்கி "உனக்கு மோடார் ஓட்டுவதில் அனுபவமுண்டா?'' என்று கேட்டாள். சின்னப்பன் "ஆஹா, எனக்கு ஐந்துவருட பழக்கமுண்டு. இதோ என் நற்சாட்சிப் பத்திரம்'' என்று கூறிக்கொண்டே ஜேபியிலிருந்த கடிதத்தை யெடுத்துக் காட்டினான்.

சந்திராபாய் "ஆகா! இந்த ஆள் நமக்குப் போதும்'' என்று கூறிவிட்டு, ஜெகநாதனை நோக்கி "இவரை யழைத்துப் போய் நமது வண்டி யிருக்கு மிடத்தையும் வண்டியையும் காட்டு'' என்றான்.

* * * *

சங்கரதாஸ் கொஞ்ச காலமாய் ஒருவிதச் சிறியக் கம்பியில்லா டெலிபோனைத் தன் சுயமுயற்சியாலும் யுக்தியாலும் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறான். விபாங்கனுடைய கெட்ட எண்ணங் கொண்ட தீவிர முயற்சிகளே சங்கரதாஸை யிவ்வேலையைத் துரிதமாய்ச் செய்யத் தூண்டிற்று.

சங்கு சிறையாக்கப்பட்ட மறுநாட் காலைதான் சங்கரதாஸின் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட எந்திரம் திருப்திகர

மாய் வேலை செய்யத் தொடங்கியது. வரதாஸிங்குக்கு அவ் விஷயம் தெரியும். அவன் சங்கரதாஸ் அவ்வேலையைத் தொடங்கியது முதல் அதைக் கவனித்துக் கொண்டேயிருக்கிறான். ஆனதால் இப்போது அது கடைசியில் திருப்தியாய் வேலை செய்வதை யறிந்ததும் மிக்க சந்தோஷமடைந்தான்.

சங்கரதாஸ் எதிரிலிருந்த மேஜைமேல் ஒரு சிறிய கறுப்புப் பெட்டியை வைத்து வரதாஸிங்கை நோக்கி,

"நண்பனே! இதோ பார். நான் இதை மிக்க சிறிய அளவில் முடித்திருக்கிறேன். இது பெரும்பாலர் மனதிற்கு எட்டாத அவ்வளவு சிறிய அளவில் அமைந்திருக்கிறது. பார்! இதோ இதன் முகமூடியைத் திறக்கிறேன். உள்இருக்கும் காற்று நுழையும் கதவுகளைத் திறக்கிறேன். இதோ இதுதான் சமாசாரத்தை வெளியனுப்பும் பாகம், இது வெளிச் சங்கதியை யுள்ளே கிரகிக்கும் கருவி. யாவும் இச்சிறு பெட்டியில் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இதோ இந்த வில்லை யழுத்துகிறேன்" என்றான்.

மேஜையின் மறு கோடியில் அந்தக் கருவியைப் போலவே மற்றொரு கருவி யிருந்தது. சங்கரதாஸ் தன் அருகிலிருந்த எந்திரத்தின் வில்லை யழுத்தியதும் மற்ற எந்திரத்திலிருந்த மணி யடித்தது. சங்கரதாஸ் "வரதாஸிங் இந்த இரண்டாவது எந்திரத்தைச் சந்திராபாயிடம் அளிக்கும்படி உன்னைக் கேட்டுக் கொள்ளப்போகிறேன்" என்றான்.

சங்கரதாஸ் அவ்வாறு கூறியதும் அந்த எந்திரத்தை யெடுத்து ஒரு பையில் வைத்துக்கட்டி அதை வரதாஸிங்கிடமளித்தான். வரதாஸிங் அதை யெடுத்துக்கொண்டு கால் மணி நேரத்திற்குள் இரசாயனசாலையை விட்டுப் புறப்பட்டான்.

வரதாஸிங் சற்று தூரம் சென்றதும் நின்று சுருட்டு பற்றவைத்தான். அந்தவிடத்திற்கு சமீபத்தில் ஒருபோலீஸ் காரன் நின்று கொண்டிருந்தான். அச்சமயம் ஜனங்கள் அவரவர்கள் பல தொழில்களுக்குச் செல்லும் வேளையான தால் வீதியில் அதிக ஜனங்கள் இருக்கவே வரதாஸிங் முத லில் போலீஸ்காரன் அருகிலிருப்பதைக் கூடக் கவனிக்க வில்லை. அவன் தன் ஜேபியில் கையிட்டுத் தேடிக் கடைசி யில் ஒரு தீக்குச்சியை யெடுத்தான். அச்சமயம் சங்காதாஸ் ஒரு வேடிக்கை செய்யக் கருதினன் போலும். சங்காதாஸ் கருதியது வேடிக்கையா யிருப்பதோடு தான் புதிதாகக் கண்டு பிடித்த கருவியைப் பரீட்சை செய்வதாகவுமாகும்.

இரசாயனசாலையிலிருந்த சங்காதாஸ் தான் மேஜை மேல் வைத்திருக்கும் கருவியிடம் சென்று கலகலவென்று நகைத்து அக்கருவியிலுள்ள வில்லை யழுத்தினன். அதே விநாடி வரதாஸிங்கிடமிருக்கும் பையிலிருந்து ஒருவித அபூர்வ சத்தமுண்டானதும் அவன் கரத்தில் மின்சாரம் பாய்வதுபோல் தோன்றியது. திடீலென்று அப்படி நேரி டவே அவன் துள்ளிக் குதித்துக் கரத்திலிருந்த சுருட்டைக் கீழே யெறிந்துவிட்டான். ஆயினும் மறுவிநாடியே சங்கதி யின்னதென்ற உண்மையை யுணர்ந்து கொண்டான்.

ஆனல் அச்சத்தத்தை யிவன்மட்டுமல்லவே கேட்டது. அருகிலிருந்த போலீஸ்காரன் செவியிலும் அது விழுந்தது. அவன் உடனே வரதாஸிங்கினருகில் வந்து நின்று மிக்க சந்தேகத்தோடு அவனை நோக்கினன். அவன் ஒரு அராஜ கக் கட்சியைச் சேர்ந்தவனென்றும் பையில் குறித்த காலத் திற்கு வெடிக்கும்படி கடிகாரம் வைத்துச் செய்யும் வெடி குண்டிருக்கிறதென்றும் சந்தேகம் கொண்டான். அதனல் சந்தேகத்தோடு வரதாஸிங்கைப் பார்த்துக்கொண்டே பையி லென்ன விருக்கிறது என்று கேட்டான்.

வரதாஸிங்குக்குக் கலவரமுண்டாகி விட்டது. தான் உண்மையைக் கூறினல் போலீஸ்காரன் அதை நம்புவானு என்ற சந்தேகம் அவனுக்குண்டாயிற்று. ஆயினும் தன்னுல் கூடியவரையில் உண்மையுடைய ஒருவன்போல் முகத்தை வைத்துக் கொண்டு "இப்பையில் கம்பியில்லாமலே பேசும் ஒரு டெலிபோன் கருவியிருக்கிறது" என்ருன்.

போலீஸ்காரன் "வெறும் புரளி. நீ நியாயாதிபதி முன் வந்து உன் கதையைக் கூறு" என்ருன். போதாக் குறைக்கு அச்சமயம் சங்கரதாஸ் தன் கருவியிலிருக்கும் மணியை யடித்துக்கொண் டிருந்ததால் வரதாஸிங்கின் பையிலும் கணகணவென்று மணியடிக்கும் சத்தம் கேட்டது. போய்க் கொண்டும் வந்து கொண்டு மிருந்த ஜனங்கள் வந்து வரதாஸிங்கையும் போலீஸ்காரனையும் சூழ்ந்துகொண்டார்கள்.

போலீஸ்காரன் வரதாஸிங்கை வா நியாயாதிபதியிடம் என்கிருன். வரதாஸிங் "சற்று பொறு, அவசரப்படாதே. நான் கூறுவது உண்மையா அல்லவா என்பதை யறிந்து கொண்டு எதையும் செய். அதைக் காட்டுகிறேன் பார்" என்ருன்.

போலீஸ்காரன் இது நியாயமே என்று கருதி அப்படியே காட்டு என்ருன். வரதாஸிங் அதை வெளியிலெடுத்துக் கொண்டு "சங்கரதாஸ்! என்ன முட்டாள்தனம் செய்கிருய். என்னை யேறக்குறைய கள்ளனுக்கிவிட்டாய்" என்ருன்.

போலீஸ்காரன் "இக்கருவி நகைக்குமா?" என்ருன். வரதாஸிங் அதை யவன் காதிலளித்து "நீயே பார். இதோ இந்த வில்லை யழுத்து" என்ருன். போலீஸ்காரன் அது மெய்யாகவே ஒரு வெடிகுண்டாயிருந்தால் எப்படி அச்சத்தோடு தொடுவானே அம்மாதிரி அதைக் கையில் பிடித்துக் கொண்டு நன்ருக உற்று நோக்கினன்.

அச்சமயம் சங்கரதாஸ் கலகலவென்று நகைத்து "வரதாஸிங் கலவரப்படாதே. நமது கருவி சரியாய் வேலை செய்கிறதாவென்று சோதித்துப் பார்க்கவே இப்படிச் செய்தேன். ஆனால் உனக்கு அசௌகரியமுண்டாகுமென்று நான் எள்ளளவும் கருதவேயில்லை. எப்படியாயினும் இப்போது அது சரியாக வேலை செய்கிறதென்று நீ யொப்பிக் கொள்வாயல்லவா?" என்றான்.

வரதாஸிங் சாந்தமடைந்து "ஆஹா! சரியாகவே வேலை செய்கிறது" என்றான். இது உண்மையாகவே பேசுங் கருவியென்றும், அதை வைத்துக்கொண்டிருப்பவன் பிரசித்தி பெற்ற துப்பற்றியும் நிபுணனாகிய சங்காதாஸின் நண்பனென்றும் அறிந்ததே போலீஸ்காரன் கலவரமடைந்துவிட்டான். அவன் வரதாஸிங்கிடம் அக்கருவியை யளித்துவிட்டு மிக்க மரியாதையோடு "அய்யா! தாங்கள் முதலிலேயே சங்காதாஸின் நண்பரென்று கூறிவிட்டிருந்தால் இவ்வளவு குழப்பம் நேரிட்டிராது. ஆயினும் என்மேல் குற்றமில்லை யென்று தாங்கள் அறிவீர்கள். நடந்த சந்தர்ப்பத்தைச் சங்கரதாஸுக்குத் தாங்கள் கூறுவீர்கள் என்று நம்புகிறேன்" என்றான்.

வரதாஸிங் "உன்மேல் ஒரு குற்றமுமில்லை. இவ்விஷயத்தில் குற்றம் என் நண்பன் மேலேயேயாகும். அதற்காக நீ கலக்கமடையவேண்டாம்" என்று கூறிவிட்டு, கருவியைப் பையில் வைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான் ஜனக்கூட்டம் இவனைச் சூழ்ந்து தொடர்ந்தது. வரதாஸிங் போலீஸ்காரனைத் திரும்பிப் பார்த்தான். அவன் குறிப்பை யறிந்த போலீஸ்காரன் உடனே யாவரையும் கலைந்துபோம்படி செய்துவிட்டான்.

வரதாஸிங் பிறகு எவ்வித இடையூறுமின்றி சந்திராபாயின் வீடுபோய்ச் சேர்ந்தான். அப்போது தான் ஜெக

காதன் புதிதாக வந்த மோட்டார் சாரதியாகிய சின்னப்ப னுக்கு அவன் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறான்.

வரதாஸிங் வீட்டிற்குள் சென்றதும் சந்திராபாய் அவனையும் அவன் கரத்திலிருந்த பையையுங் கண்டு "மிக்க வந்தனம். நீ யுடனே யெங்களை விட்டுப் பிரிந்துவிடப் போகிறதில்லையே?" என்றாள்.

வரதாஸிங் "இல்லை யில்லை. நான் சங்கரதாஸிடமிருந்து உனக்கு ஒரு பரிசு கொண்டுவந்திருக்கிறேன். அது ஒரு கம்பியில்லாத டெலிபோன். நீ யதை யெப்போதும் உன் ஜேபியிலேயே வைத்துக்கொண்டு சென்றால், எந்தச் சமயத்திலும் அவனோடு சம்பாஷிக்கலாம் என்று அவன் கூறுகிறான்" என்றான்.

இதைக் கேட்ட சந்திராபாய் மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்து "ஆ! இது மிக்க அபூர்வமே" என்று தன் அத்தையை யழைத்துச் சங்கதியைக் கூறினாள். வரதாஸிங் சந்திராபாய்க்கும் அவள் அத்தைக்கும் அந்த எந்திரத்தின் உளவைக்கூறி வழியில் அதனால் தான் அடைந்த அநுபவத்தையும் விவரமாகக் கூறினான்.

* * * *

வரதாஸிங்கையும் சந்திராபாயையும் சந்திராபாயின்வீட்டிலேயே விட்டுவிட்டு நடுக்கடலில் நடக்கும் ஒரு சங்கதியைக் கூறவேண்டியது நமது கதைக்கு அவசியமாயிருக்கிறது.

அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஒரு புராதனமான சிறிய கப்பல் இந்திரபுரியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அதன் கப்பித்தான் கங்காதரன் என்பவன். அவன்

கள்ளப் பயல்களில் பேர்போனவன். சுத்த அயோக்கிய னென்று பிரசித்தி பெற்றவன். அவன் கப்பலிலிருக்கும் வெள்ளையரும் சீனக்காரருமாகிய ஆட்களனைவரும் கள்ளப் பயல்களே. கங்காதான் முகமே கொடூரமாகிய மிருகத்தின் முகம் போன்றது. கப்பல் கடலில் வந்து கொண்டிருக்கை யில் கங்காதானாகிய கப்பித்தான் மேல் தட்டில் நின்று கரை யெந்தப் பக்கம் இருக்கிறதென்று பார்த்துக் கொண் டிருந்தான்.

சற்று நேரங்கழித்து அவன் ஒரு சிறு கடிதத்தில் ஏதோ சில சங்கதிகளை வரைந்து முடிந்ததும் மாலுமிகளில் ஒருவன் ஒரு மரக்கூண்டிலிருந்து ஒரு வெள்ளைப் புறாவை யெடுத்துக் கொண்டு அவனருகில் வந்தான். அப்புறா சமா சாரம் கொண்டுபோகும் புறா. அது படபடவென்று இறக் கைகளை யடித்துக்கொண்டிருக்கிறது. கப்பித்தான் எழுதிய சிறு கடிதத்தைச் சின்னதாகச் சுருட்டி ஒரு இறகுக்குள் சொருகி அப்புறாவின் ஒரு காலில் கட்டி அதைக் கரையின் திக்கை நோக்கி விட்டு விட்டார்கள்.

கப்பித்தான் அதை விட்டுவிட்டுத் தன் ஆட்களை நோக்கி "நம்மவர்கள் நாம் க்ஷேமமாகத் திரும்பி வந்து விட் டோம் என்றும் இவ்வளவு சீக்கிரத்தில் வந்து விட்டோ மென்றும் அறிய மிக்க சந்தோஷமடைவார்கள்" என்றான்.

* * * *

விபாங்கனும் அவன் ஆட்களும் ஒரு வாடகை வீட்டி னறையில் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டும் சம் பாஷித்துக்கொண்டு மிருக்கிறார்கள். அந்த விடம் விபாங் கன் வசிக்குமிடமல்ல. ஒரு காரியத்திற்காக அவர்கள் வாட கைக்கு எடுத்துக் கொண்டிருக்குமிடம். அதில் அலங்காரம் ஒன்றுமேயில்லை.

186534

ஆனால் அந்த அறையிலிருந்த ஒரு சாளரத்தில் ஒரு பெரிய மரப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அது ஒரு சூத்திரப்பெட்டி யெனலாம். ஏனெனில் அதன் ஒரு பக்கம் ஒரு கதவு திறக்கப்பட்டிருந்தது. சொல்ப அசைவினாலும் அக்கதவு மூடிக்கொள்ளக் கூடிய விதமாய் வைக்கப்பட்டிருக்கிருக்கிறது. அப்பெட்டியின் பின் பக்கமிருந்து ஒரு கம்பி செல்கிறது. அறையின் உட்பக்கம் ஒரு பக்கத்தில் ஒரு சிறு கொடி வைக்கப்பட்டிருக்கிறது. பெட்டியின் பின் பக்கமிருக்கும் கம்பியின் மறுமுனை அந்தக்கொடியில் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதனால் பெட்டியின் கதவு மூடிக்கொண்டதே அக்கொடி யசையும்; அறைக்குள்ளிருப்பவர்கள் அதைக் கண்டதும் பெட்டியின் கதவு மூடிக்கொண்டது என்று தெறிந்து கொள்ளலாம்.

அந்த அறையில் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக் கொண்டே பேசிக்கொண்டிருக்கும் விபாங்கனும் அவன் கள்ளக் கூட்டமாகிய சீனக்காரரும் அடிக்கடி அக்கொடியைப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். இவர்கள் அவ்வாறு பார்த்துக்கொண்டே யிருக்கையில் சாளரத்தில் இறக்கைகள் அடிக்கப்படும் சத்தம் கேட்டது. அதே நிமிடம் ஒரு வெள்ளைப் புறா அங்கிருந்த பெட்டிக்குள் நுழைந்தது. உடனே பெட்டியின் கதவு மூடிக்கொண்டது. மறு விநாடி அறைக்குள் இருந்த கொடி அசைந்து சாயத் தொடங்கியது.

உடனே சீனக்காரனைவரும் சென்று அப்பெட்டியைச் சூழ்ந்து கொண்டார்கள். விபாங்கன் அதற்குள் வந்திருக்கும் புறாவை யெடுத்து மெதுவாய் அதன் காலில் கட்டப்பட்டிருந்த கடிதத்தை யவிழ்த்துக்கொண்டான். அப்புறா வுடனே வேறொரு கூண்டில் விடப்பட்டது. அது வந்து நுழைந்த கூண்டு இன்னொன்று வருவதற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

186534

விபாங்கன் புருவின் காலில் இருந்தெடுத்த கடிதத்தைப் பிரித்து வாசித்தான். அதில் பின் வருமாறிருந்தது:—

"இரவு ஒரு மணி—மணல் திட்டுக்குத் தென் கிழக்கு இருபத்தாறுவது மைல்; சாத்தான் தீவில் இரவு தங்குவோம்."

இதை வாசித்ததும் விபாங்கன் தன் ஆட்களில் ஒருவனை நோக்கி "நீ சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டிருந்து பின்னுல் ஏதேனும் சமாசாரம் வந்தால் எனக்குத் தெரியப்படுத்து" என்றான்.

கால்மணி நேரங்கழித்து விபாங்கன் அந்த விடத்தை விட்டுப் புறப்பட்டான். கங்காதரன் என்பவனுல் நடத்தப்படும் கப்பல் ஒரு கள்ளக்கப்பல் எனலாம். அது அன்னிய கப்பல்களைக் கொள்ளை யடிக்க வில்லை யெனினும் அது செய்வது கள்ளத் தொழிலே. கங்காதரன் என்ற கப்பித்தான் ஒரு முதற்றரமான கள்ளப்பயல். அவன் விபாங்கனுக்கு உளவாய் வேலை செய்பவன். அவன் சீனுவிலிருந்து கள்ளத்தனமாய் அபினி கொண்டு வந்து இரகசியமாய் விபாங்கனிடம் அளிப்பது. விபாங்கனுக்கு உளவாய் இந்திரபுரியில் சீனுக்காரர்களாகிய கள்ளர் பலர் இருக்கிறுர்கள். அவர்கள் உள்ளுக்குள்ளாய் இத்தகைய வேலை செய்துகொண்டு வெளிக்கு நாணயமாய் ஹோட்டல் வைத்துக்கொண்டிருப்பவர்கள் போலும், வர்த்தகம், கூலி வேலை முதலியவை செய்பவர்கள் போலுமிருப்பார்கள்.

விபாங்கன் புருவிருக்கும் இடத்தை விட்டுத் தன் வாசஸ்தலத்திற்கு இரகசிய வழியாகச் சென்றான். அவன் உள்ளே நுழைந்ததும், அவனுக்காக அங்கு காத்துக்கொண்டிருந்த ஒரு சீனுக்காரன் தடலென்றெழுந்து மிக்க மரியாதையோடு வந்தன மளித்தான். அவன் சீட்டாக்கடைக்காரனுகிய அப்புக்குட்டி என்பவனே.

அப்புக்குட்டி விபாங்கனை நோக்கி "எஜமானே! ஏதேனும் சமாசாரம் இப்போதாவது வந்ததோ?" என்றான். விபாங்கன் "ஆம், கங்காதரன் உன்னுடைய அபினியைக் கொண்டு வந்திருக்கிறான். நான் அவனுக்கு ஒரு பெண்ணைக் கொடுக்கப் போகிறேன். அவன் அவளைக் கொண்டுபோய் ஷாங்கேயில் விற்று நல்ல பணம் பெறலாகும்" என்றான்.

அப்புக்குட்டி என்பவன் கள்ளத்தனமாய் அபினி விற்பதையே முக்கிய ஜீவனமாக வுடையவன். அதினால் அவன் நல்ல பணம் சம்பாதித்திருக்கிறான். ஆகையால் அபினி வந்தது என்றதே அவன் மிக்க சந்தோஷமடைந்து விபாங்கனுக்குத் தாழ்ந்து வந்தனமளித்தான். விபாங்கன் அவனை நோக்கி "இரவு தீபம் வைத்ததும் நீ எதற்கும் ஆயத்தமாக விரு" என்றான்.

அவன் "அப்படியே யிருக்கிறேன்" என்று கூறிவிட்டு மறுபடி வந்தனமளித்து விட்டுச் சென்றான்.

---

## 30-வது அத்தியாயம்.

சங்கரதாஸ் வாதாஸிங்கிடம் அந்தக்கம்பியில்லா டெலிபோனைக் கொடுத்து சந்திராபாயிடம் கொடுக்கும்படி யனுப்பிய பின் சற்று நேரம் சிந்தித்துப் பார்த்தான். விபாங்கன் விஷயங்களைச் சரியாய் அறிந்தால் தான் அவனைப் பிடிக்க முடியும் என்று அவன் மனதிற்குப் புலப்பட்டது. ஆகையால் அக்கள்ளப்பயல்கள் இருக்கும் சினப்பாளையத்தில் போய்ச் சற்று நேரம் வேலை செய்தால் அவனைப்பற்றிய ஏதேனும் உளவு அகப்படும் என்று அவன் புத்திக்குத் தோன்றியது. சினப்பாளையம் என்பது இந்திரபுரியில் சினக்காரர்கள் வசிக்கும் பிரதேசம்.

சங்கரதாஸ் ஒரு அநாகரீக மனிதன் போல் மாறுவேட மணிந்து கொண்டு தன் தொப்பியை முன்னுக்குச் சாய்த் துக்கொண்டு வெளியிற் புறப்பட்டான். ஒருமுறை யவன் ஒரு தீபஸ்தம்பத்தின் மறைவில் நின்று ஒரு மனிதனைக் கவனித்தான். அம்மனிதன் இரண்டு மூன்று முறை வீதி யில் கீழும் மேலுமாய்த் திரிந்தான். சங்கரதாஸ் அவனை யுன் னிப்பாய்ப் பார்த்தபோது அவன் தனக்குத் தெரிந்தவன் போலவே தோன்றினன். ஆனல் யார், எப்போது பார்த் தோம் என்ற விவரம் ஒன்றும் தெரியவில்லை.

அம்மனிதன் அங்கிருந்த தீபஸ்தம்பத்தினருகில் சங்கர தாஸை உராய்ந்து கொண்டே சென்றான். அச்சமயம் அவன் கரம் சங்கரதாஸின் கரத்தைத் தொட்டது போலிருந் தது. மறு விநாடி தன் கரத்தில் ஏதோ அட்டைத் துண்டு இரகசியமாய்ச் சொருகப்பட்டது போல் சங்கரதாஸுக்குப் புலப்பட்டது. அவனுக்குண்டான வியப்பு அதிகமே. ஆனல் இரகசிய துப்பறியும் போலீஸ் இலாகாவின் வேலைகள் எப் படி நடக்கின்றன வென்று அவன் நன்ருக அறிவான். ஆயினும் இச்சமயத்தில் இது அவர்கள் வேலைதானோ நமது எதிரிகளின் சூழ்ச்சியோ என்ற கலவரம் ஒன்றிருக்கிறது. ஆயினும் சங்கரதாஸ் சூக்கும அறிவும் சமயோசித புத்தியு முடையவன்.

ஆதலின் சங்கரதாஸ் தன் கரத்தில் சொருகப்பட்ட சிறு அட்டைத் துண்டைப் பற்றிக் கொண்டான். அதை யளித்த மனிதன் சாதாரணமாய்ச் செல்பவன் போல் மெது வாய்ச் சென்ருன். அவன் அவ்வாறு செல்லும்போது சங்கரதாஸ் அவனைத் திரும்பிப் பார்த்து விட்டு அச்சீட்டை நோக்கினன்.

அது சாதாரணமாய் ஒருவர் அன்னியரைக் காணப் போகும்போது தம் பெயர் முதலியவற்றை யறிவிப்பதற்காக

அனுப்பும் துண்டு. அதில் ஆளினுடைய பெயர் தொழில் முதலியவை யச்சியற்றப்பட்டிருக்கும். சங்கரதாஸ் நோக்கியபோது அந்த அட்டைத்துண்டில்,

"காப்டன் பெரிய நாயகம்—மேல் நாட்டு இரகசியப் போலீஸ்" என்று அச்சியற்றப்பட்டிருந்தது. அதன் கீழ் "பின்னால் வா" என்று எழுதப்பட்டிருந்தது.

அதைக்கண்டதும் சங்கரதாஸ் சற்று நேரம் தடுமாற்ற முற்றான். மறு நிமிடம் உண்மை யறிந்துகொண்டான். காப்டென் பெரிய நாயகத்தின் மாறு வேடம் பூரணமானதாக விருந்தது. ஆயினும் இருவரும் தங்கள் அடையாளத்தைப் பூரணமாக மறைத்து விட முடியாது. ஏனெனில் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து துப்பறியும் வேலை செய்திருக்கிறார்கள்.

சங்கரதாஸ் மெதுவாக அவன் பின்னால் சென்றான். காப்டென் பெரிய நாயகம் சமீபத்திலிருந்த ஒரு ஹோட்டலுக்குள் அதன் பக்கத்திலுள்ள வழியாய்ச் சென்று ஒரு பின் பக்க அறையில் உட்கார்ந்தான். இரண்டொரு நிமிடங்களுக்குள் சங்கரதாஸ் உள்ளே சென்று அவன் மேஜையின் எதிரிலிருந்த ஆசனத்தில் உட்கார்ந்து இரகசியமாய் அவன் காதைப்பற்றிக் குலுக்கினான்.

பிறகு இருவரும் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கித் தலை யசைத்துக்கொண்டு நாற்புறங்களிலும் நோக்கினார்கள். அங்கு வேறு ஒருவருமில்லை. தாங்கள் இருவருமே இருப்பதாகத் தெரிந்தது. சங்கரதாஸ் பெரிய நாயகத்தை நோக்கி "நீ யிங்கு என்னத்திற்காக வந்திருக்கிறாய்?" என்று இரகசியமாய் வினவினான்.

பெரிய நாயகம் "இந்த இரவு ஒரு பெரும் பாரமான அபினி கள்ளத்தனமாக இங்கு கொண்டுவரப்படப் போகி

றது. இப்போது அந்தச் சீனுக்கள்ளக் கூட்டத்தை யடி யோடு பிடித்து விட வேண்டுமென்று நான் முயற்சி செய்கி றேன். நீ எனக்கு உதவி செய்யக்கூடுமென்று கருதுகி றேன்'' என்ருன்.

சங்கரதாஸ் "அப்புக்குட்டி யென்பவன் சீட்டாக்கடை வைத்துக்கொண்டிருக்கிருனே. அந்த விடத்தின் சம்பந்த மாய் ஏதேனும் விவகாரம் நடத்தவேண்டி யிருக்குமோ?'' என்று கேட்டான்.

பெரிய நாயகம் "ஆம், அங்கு பெரும்பாலும் விபாங் களைப் பற்றிய உளவகப்படுமா?'' என்ருன்.

சங்கரதாஸ் அவன் கேள்விக்கு நேராக விடையளிக்கா மல் "நான் உனக்கு உதவி செய்கிறேன்'' என்ருன்.

பெரிய நாயகமும் சங்கரதாஸும் நெடு நேரம் பேசிக் கொண் டிருந்தார்கள். கடைசியில் தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி ஒரு திட்டம் ஏற்படுத்திக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள். அவர்கள் வெளி வந்து வீதிக்குத் திரும்பும்போது அந்தத் திக்கே யொரு சீனுக்காரன் செல்வதைச் சங்கரதாஸ் கண்டு பெரிய நாய கத்தை மறைவில் இழுத்துக்கொண்டான்.

பெரிய நாயகம் என்ன சங்கதி என்று கேட்டான். சங்கரதாஸ் முன்னே செல்லும் சீனுக்காரனைச்சுட்டிக்காட்டி "அதோ ஒரு சீனுக்காரன் செல்கிருன் பார். அவன் தான் சீட்டாக்கிடங்கு வைத்துக்கொண்டிருக்கும் அப்புக்குட்டி என்பவன். அவன் பின் தொடர்ந்து பார்ப்பதால் ஏதேனும் பலன் கிடைக்கும் என்று கருதுகிறேன்'' என்ருன்.

அவ்வாறே இருவரும் முன்னே செல்லும் அப்புக் குட்டி என்பவன் கண்களுக்குப் புலப்படாமலும், தங்களை

யொருவரும் பின் பற்றி வரவில்லையென்று கவனித்துக் கொண்டும் அவனைத் தொடர்ந்து சென்றார்கள்.

இரண்டு மூன்று வீதிகளைக் கடந்த பின் அவன் ஒரு வீட்டிற்குள் நுழைந்தான். அது குடியில்லா வீடு போல் இருந்தது. அந்த வீட்டில் தான் முன் விபாங்கனும் இன்னும் சிலரும் இருந்தார்களென்றும் புரு கடிதம் கொண்டு வந்ததென்றும் நாம் கூறியது. விபாங்கன் அப்புக்குட்டியிடம் சென்று அபினிக்கப்பல் வந்திருக்கிறதென்று கப்பித்தான் அனுப்பிய சங்கதியைக் கூறிய பின் அப்புக்குட்டி அங்கிருந்து புறப்பட்டு வந்தான்.

அப்புக்குட்டி வீட்டிற்குள் நுழைந்ததும் சங்கரதாஸும் அவன் நண்பனும் இரண்டொரு நிமிடம் வெளியில் நின்று ஒருவரும் வெளியில் இல்லை யென்பதை யறிந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள். முன் கூடத்தில் மேலேறிச் செல்லப் படிகளிருந்தன. இருவரும் சந்தடி செய்யாமல் ஏறினார்கள். மேலே நீண்ட தாழ்வாரமும் அதன் கோடியில் ஒரு அறையுமிருந்தது அந்த அறையிலிருந்து மட்டுமே கதவின் சந்தில் கொஞ்சம் தீப ஒளி தெரிந்தது. அந்த அறை வீட்டின் பின்னுலிருக்கும் முற்றத்தைப் பார்த்தபடியிருக்கிறது.

சங்கரதாஸ் கதவின் சந்தில் காதை வைத்து உற்றுக் கேட்டான். இரண்டு சீனக்காரர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. பெரிய நாயகம் குசுகுசு வென்றும் சமிக்கையாகவும் "அவர்கள் என்ன சங்கதி பேசுகிறார்களென்று உனக்குத் தெரிகிறதா ?" என்று வினவினன்.

சங்கரதாஸ் அவன் கரத்தைப்பற்றி சற்று எட்ட அழைத்து வந்து "அவர்கள் ஏதோ பட்சியைப் பற்றிப் பேசுகிறார்கள். இரண்டே பேர் இருக்கிறார்கள். நாம்

இவர்களைப் பிடித்துக்கொள்ளலாம். கதவு சும்மா தாளிடப் பட்டு மட்டுமிருக்கிறது. சுத்தப் புராதனக் கதவு. இருவரும் ஏக காலத்தில் மோதினால் திறந்துகொள்ளும். நீ முன் இருப் பவனைப் பார்த்துக்கொள். இருவரும் ஒருவர் பக்கத்தில் ஒருவர் வரிசையாயிருந்தால் நீ வலது பக்கமிருப்பவனைப் பார்த்துக் கொள் மற்றவனை நான் பார்த்துக்கொள்ளுகி றேன்'' என்றான்.

மறு நிமிடம் இரண்டு பலம் பொருந்திய ஆட்களும் ஏக காலத்தில் தாக்கியதே கதவு படீர் என்று திறந்து கொண் டது. இருவரும் உள்ளே பாய்ந்ததும், சீனாக்காரர்கள் திடீ லென்றுண்டான திகைப்பிலிருந்து சமாளித்து நோக்குவதற் குள் ஆளுக்கொருவரைப்பற்றினார்கள். ஆயினும் ஒருவன் நாற்காலியைச் சட்டென்று தூக்கிச் சங்கரதாஸ்மேல் மோதி விட்டுச் சாளர வழியாய் வெளி தாண்டக் கருதினான்.

ஆனால் சங்கரதாஸ் நாற்காலியோடு அவனை மூலையிற் றள்ளினான். மறு வினாடி இரண்டு சீனாக்காரரின் முகங்க ளுக்கும் நேராக இரண்டு கைத் துப்பாக்கிகள் நீட்டப்பட்ட தும் இருவர் கரங்கட்கும் விலங்குகள் பூட்டப்பட்டன. இரு வரையும் கீழே யுட்காரச் செய்து எழுந்தாலும் அசைந்தா லும் தட்சணம் செத்தீர்கள் என்று கூறிவிட்டுச் சங்கரதாஸ் அறையை நோக்கினான். சாளரத்திற்கு வெளியில் ஒரு பெட்டி கட்டப்பட்டிருப்பதை நோக்கினான்.

அதற்குள் பெரிய நாயகமும் அதைக்கண்டு அதென்ன சங்கரதாஸ் என்றான். சங்கரதாஸ் பெட்டி யருகிற் சென்று அதைப் பார்த்துவிட்டு "இது சமாசாரம் கொண்டுவரும் புறாக்களுக்காக வைக்கப்படும் கூண்டு'' என்று கூறினான். மறுவிநாடி அக்கூண்டிலிருந்து அறைக்குள் வரும் கம்பி யையும் அதன் மறுமுனை அறைக்குள் ஒருபக்கம் மேஜை

மேலிருக்கும் ஒரு சிறு கொடியில் கட்டப்பட்டிருப்பதையும் கண்டு சங்கதி யறிந்துகொண்டான்.

சங்கரதாஸ் தங்கள் பாஷையில் பெரிய நாயகத்தை நோக்கி, "நண்பனே! இக்கள்ளப்பயல் எதற்காகவோ காத்துக்கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலும் புரு ஏதோ சமாசாரம் கொண்டுவரப் போகிறதென்றே எனக்குத் தெரிகிறது. எதற்கும் சற்றுநேரம் பொறுத்துப் பார்ப்போம்" என்றான்.

அவ்வாறே யிருவரும் உட்கார்ந்தார்கள். ஆனால் அவர்கள் நெடுநேரம் காக்கவேண்டியில்லை. பத்து நிமிடங்கள் கழித்து சாளரத்திற்கு வெளியில் இறக்கைகள் படபடவென்று அடித்துக்கொள்ளும் சத்தம் கேட்டது. மறுவிநாடி அறையிலிருக்கும் கொடி யசைந்தது.

சங்கரதாஸ் உடனே எழுந்து சென்று பெட்டிக்குள் புரு வந்திருப்பதைக் கண்டதும் மெதுவாகக் கதவைத் திறந்து புருவைப்பற்றி அதன் காலில் கட்டப்பட்டிருந்த கடிதத்தை யெடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில்,

"இன்னும் இரண்டுமணி நேரத்தில் வாணத்துறையிலிருந்து புறப்பட்டு விடுவோம். மாலை 5 மணி. இப்படிக்குக் கங்காதரன்" என்று வரையப்பட் டிருந்தது.

சங்கரதாஸ் அங்கு சிக்கிக்கொண்டிருக்கும் அப்புக்குட்டியையும் மற்றொரு சீனக்காரனையும் நோக்கி "இதென்ன சமாசாரம்?" என்று கேட்டான். எவ்வளவோ பயமுறுத்தியும் நல்ல தனத்திலும் கேட்டும் அக்கள்ளப் பயல்கள் ஒரு வார்த்தைகூட அதைப்பற்றிக் கூறவில்லை. ஒரே பிடிவாதமாயிருந்தார்கள். பெரியநாயகம் மிக்க கோபத்தால் இப்பயல்களை யுடனே சுட்டுத் தள்ளிவிடுகிறேன் என்றான். ஆனால் சங்கரதாஸ் அதைத் தடுத்துவிட்டான்.

சங்கரதாஸ் அப்புக்குட்டியை நோக்கி "அடே! எழுந்து முன்னே நட!" என்றான். அப்புக்குட்டி பேசாமல் எழுந்து சென்றான். பெரியநாயகம் மற்ற சீனுக்காரனை ஒரு உதை கொடுத்து "எழுந்து முன்னேசெல். இன்றேல் தாட்சண்ணியமின்றி எமலோகத்திற் கனுப்பிவிடுவேன். சங்கரதாஸின் சிபாரிசைக்கூடக் கவனிக்கமாட்டேன்" என்றான்.

பயங்கரமான விபாங்கன் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் இருவர் அகப்பட்டுக்கொண்டார்கள். அவர்களில் ஒருவன் முக்கியமானவன். ஆயினும் முதலாளியாகிய விபாங்கன் சிக்கவில்லை. அதனாலுண்டான மனச்சோர்வைச் சங்கரதாஸ் வெளிக்குச் சற்றும் காட்டாமலே சென்றான்.

அவர்கள் சற்றுதூரம் சென்றபோது அங்கு ஒரு போலீஸ்காரன் காவல் நின்றுகொண் டிருந்தான். சங்கரதாஸ் அவனை யழைத்துத் தானும் பெரியநாயகமும் யார் என்பதை அவனுக்கு அறிவித்து, இரண்டு கள்ளர்களையும் அவன் வசத்தில் ஒப்புவித்து "நாங்கள் டெலிபோன் கொடுத்து உனக்கு உதவியாட்கள் வரச்செய்கிறோம். அவர்கள் வசம் இந்த இரண்டு கள்ளரையும் மிக்க ஜாக்கிரதையாய் ஸ்டேஷன் சிறைச்சாலைக் கனுப்பு. இவர்கள்மேலுள்ள குற்றத்திற்கு அவசியமான ருசுக்களை நாங்கள் சேகரித்து வரப் போகிறோம்" என்று கூறினான்.

சங்கரதாஸும் பெரியநாயகமும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று முதலில் அகப்பட்ட டெலிபோன் காரியாலயத்தில் நுழைந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு இரண்டு கள்ளர்களையும் கொண்டுபோக வேண்டியதைப்பற்றிக் கூறிவிட்டபின், சங்கரதாஸ், தன் இரஸாயனசாலை யறையிலுள்ள டெலிபோன் நம்பரைக் கூப்பிட்டு வாதாஸிங்கை நோக்கி,

"வாதாஸிங்! முதல்தரமான உளவு அகப்பட்டிருக்கிற தென்று நினைக்கிறேன். பெரியநாயகம் உனக்குத் தெரிட்

மல்லவா? நீ பத்தேரி யருகில் உடனே வரவேண்டும். அங்கொரு துரைத்தன சுங்க இலாகா படகு ஆயத்தமா யிருக்கக் காண்பாய். அங்கிருக்கும் கம்பியில்லா டெலிபோன் கருவியை அவசியம் எடுத்துவா. மறந்துவிடப் போகிருய்'' என்று கூறினன்.

வரதாஸிங் உடனே டெலிபோன் கருவியை யெடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

---

## 31-வது அத்தியாயம்.

விபாங்கனுடைய சதியாலோசனை யிப்போதுதான் நடக்கையில் ஆரம்பமாகிறது. சந்திராபாய் புதுப்பாளையம் என்ற கிராமத்தில் வசிக்கும் தன் சினேகி யொருத்தியிடம் செல்லக் கருதி மேற்கண்ட சம்பவங்கள் நடந்த அதே தினம் மாலைப்போது, புதிதாக வந்திருக்கும் சின்னப்பன் என்ற தன் மோட்டார் சாரதியை யழைத்துத் துரிதமாக வண்டியைத் தயாரிக்கும்படிக் கூறினள்.

சின்னப்பன் மிக்க மரியாதையோடு "ஆகா ஒரு விநாடியில் தயார் செய்கிறேன்" என்ருன். மாரி சந்திராபாயின் உடை முதலியவற்றை யொரு பிரயாணப் பையில் வைத்து ஆயத்தப்படுத்தினள். ஜகநாதன் அதை யெடுத்துப்போய் வண்டியில் வைத்தான்.

சந்திராபாய் வெளியில் வந்து வண்டியில் ஏறும்போது சாரதியை நோக்கி "நாம் சாத்தான் தீவிற்குச் செல்லும் பாதை வழியே சென்று தாத்தப்பன் கால்வாயைக் கடந்து செல்ல வேண்டும்'' என்று கூறினள். கள்ளப் பயலாகிய சின்னப்பன் மரியாதையோடு தலையசைத்தான்.

ஜெகநாதன் தன் எஜமானிக்கு வந்தன மளித்துத் திரும்பியதும் வண்டி புறப்பட்டது. நகரின் கீழ்ப்பாகத்தை நோக்கிச் சென்று ஓரத்திலுள்ள ஒரு கால்வாயையும் கடக்கு மட்டும் சந்திராபாய் தன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். நக ரத்தைக் கடந்து வெளிப் பிரதேசத்தில் வண்டி செல்லும் போது சுகமான காற்று வீசியது. அதனுல் சந்திராபாய் தன் சிந்தனையை விட்டு வெளியி லிருக்கும் காட்சியைக் கவனிக்கத் தொடங்கினுள்.

அவள் வண்டியின் சாளர வழியாய்ப் பார்க்கத் தொடங்கினுள். எவ்வளவு தூரம் வந்தோமென்பது அவளுக் குத் தெரியாவிடினும் அந்தப் பிரதேசங்களிலுள்ள பாதைக ளெல்லாம் அவளுக்கு நன்ருகத் தெரியும். அச்சமயம் பாதை இரண்டாகப் பிரியு மிடத்தை நெருங்கியது. சின்னப்பன் இடதுபக்கம் செல்லும் பாதையே தன் வண்டியைச் செலுத் தினுன். தான் போகவேண்டிய விடத்திற்கு வலதுபக்கம் செல்லும் வழிதான் நேராகவும் சமீபமாகவுமுடையதென்று சந்திராபாய்க்குத் தெரியும். ஆகையால் அவள் சாரதியை நோக்கி,

"நீ செல்வது தப்புவழி. வலதுபக்கப் பாதையே செல்" என்ருள்.

**சின்னப்பன்:**—"இந்த வழியில்தான் பாதை சரியாகவிருக் கிறது" என்று கூறி யவ்வழியே சென்ருன்.

அவன் விபாங்கனுடைய ஆட்களுக்குப் போதுமான அவகாசம் கொடுக்கவேண்டியே அக்கள்ளப் பயல் அம்மா திரி தந்திரம் செய்தான். ஏனெனில் வண்டி அந்தத் திருப் பத்தில் செல்லும்போது, விபாங்கன் ஆட்களாகிய இரண்டு முரட்டுப் பயல்கள் அங்கிருந்த பாறையோர மிருக்கும் புதர் களில் மறைந்து ஒளிந்துகொண் டிருக்கிருர்கள். அவர்கள்

வண்டிவருகிறதா வென்று பார்த்துக்கொண்டே யிருந்து வண்டியைக் கண்டதும் நன்ருக மறைந்து கொண்டார்கள்.

சின்னப்பன் தன் எஜமானியின் கட்டளேப்படியே வண்டியை நிறுத்தியவன்போல் தான் செல்லும் தப்பு வழியிலேயே சற்று தூரம் சென்றபின் வண்டியை நிறுத்தினுன். அத்தகைய சந்தர்ப்பமே விபாங்கனுடைய கள்ளப்பயல்களுக்கு வேண்டிய சமயம். அக்கள்ளர் அச்சமயம் அங்கு வேறு வண்டிகளாவது ஆட்களாவது இல்லையென் றறிந்ததும் தங்கள் மறைவிடத்திலிருந்து வெளிவந்தார்கள்.

சந்திராபாய் தன் வண்டி நிறுத்தப்பட்ட போதிலும் சாரதி தன் கட்டளேயை யலட்சியம் செய்தானென் றுணர்ந்து சற்று சிந்தித்தாள். அதற்குள் இரண்டு முரடர்கள் பாய்ந்து வந்து அவளேப் பிடித்துக்கொண்டார்கள். அவள் சத்தமிடாதபடி அவள் வாயின்மேல் சீலே கட்டப்பட்டது. அவள் தன்னுலானவரையில் விடுவித்துக் கொள்ளப்பார்த்தும் சற்றும் பயனில்லே. இரண்டு முரடர்கள் பலத்தின் முன் ஒரு பெண்ணின் பலம் என்னசெய்ய முடியும்? அவள் தைரியமும் சற்றும் பயன்படாது.

ஆடவர் முன் பெண்கள் பலம் சற்றும் செல்லாது. இயற்கையிலேயே ஆண்டவன் அவர்களே ஆடவர்களால் காப்பாற்றப் படும்படி சிருட்டித்திருக்கிருர். மாதர்கள் எப்போதும் புருடர்களின் பாதுகாப்பில் இருக்கவேண்டியவர்களே. இயற்கையில் அவர்கள் தேக அமைப்பே அப்படி யிருக்கிறது.

இக்காலத்தில், கலியின் கொடுமையால், மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கிப் பெரிய மயக்கத்திலிருக்கும் நம் நாட்டு மாதரிற் சிலர் தாங்கள் ஆடவரிற் சற்றும் தாழ்ந்தவர்களல்லவென்றும் இலௌகிகத்தில் தாங்களும் ஆடவர்க்குச்

சமமாகவே நடத்தப்பட வேண்டுமென்றும், ஆடவர் தொழிலைத் தாங்களும் செய்யவேண்டு மென்றும் கருதுகிறார்கள். இது ஒருபோதும் நடக்காத காரியம்.

நாம் இப்படிக் கூறுவதால் நாம் பெண்கள் அடிமையாக விருக்க வேண்டும் என்றும் கருதுவதாக நினைக்கலாகாது. மேல்நாட்டில் பெண்களுக்கிருக்கும் மரியாதையும் கௌரவமும் வெளித்தோற்றமே. அதோடு அவர்களது ஆன்மார்த்தத்திற்கு நன்மை புரியத் தக்கதல்ல. நம் நாட்டில் பெண்களின் க்ஷேமமே நமக்கு முக்கியம். நமது சாத்திரங்களெல்லாம் அவர்களின் க்ஷேமத்தைக் கருதியே அவர்களுக்குத் தக்க விதிகளை யேற்படுத்தி யிருக்கின்றன. இந்த உலகில் அவர்கள் அற்பகால சுகத்தை யனுபவித்து பிறகு நெடுங்காலம் கீழ்ச் சென்மங்களில் கஷ்டப்படுவது நலமா? இச்சென்மத்தில் தக்க வழியில் நடந்து பிறகு அழியாத நித்தியானந்த சுகத்தை யனுபவிப்பது நலமா? என்பதை யாலோசித்தே நம்முன்னோர்களாகிய மகான்கள் நம் பெண் மக்களுக்குத் தக்க விதியை யேற்படுத்தினார்கள்.

இப்போது நமது சந்திராபாயாகிய கன்னிகை தன் பிரியப்படி எங்கு வேண்டுமாயினும் செல்லலாம் என்ற ஆசாரமிராவிட்டால் அவள் இத்தகைய ஆபத்துகளில் சிக்குவாளோ? நமது நாட்டுப் பெண் ஒருத்திக்கு இத்தகைய துன்பங்கள் உண்டாக வழியிருக்கிறதோ? என்பதை யிதை வாசிப்போர் கவனித்து நமது பெண்மக்களை மேல் நாட்டு ஆசாரங்களில் நுழைய விடாமல் பாதுகாக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

* * * *

இரண்டு முரடர்கள் முன் சந்திராபாய் என்ன செய்ய முடியும்? அவர்கள் அவள் சத்தமிடாதபடி அவள் வாயைக்

கட்டி வண்டியின் அடியில் அவளைப்போட்டு வண்டியின் மேல் மூடியைப்போட்டு விட்டார்கள்.

சாரதியாகிய சின்னப்பன் மேற்கண்டபடி வண்டியை மூடியதே வந்திருந்த முரடர்களில் ஒருவன் "நேராய் வாணுத்துறைக்கு வண்டியை விடு. அவர்கள் சீக்கிரம் அங்கு வந்து விடுவார்கள்" என்றான்

சந்திராபாய் தன் சாரதிக்குக் கூறியது புதுப்பாளையத்திற்குச் செல்லும்படி. ஆனால் சாரதியாகிய சின்னப்பன் அக்கள்ளன் கூறியபடி வாணுத்துறைக்கு வண்டியை விட்டான்.

* * * *

மாலைப்பொழுது போய் நேரமாய் விட்டது. வரதாஸிங் சங்கரதாஸ் டெலிபோன் மூலமாய்க் கட்டளையிட்டபடி கம்பியில்லா டெலிபோன் கருவியை யெடுத்துக்கொண்டு பத்தேரித்துறை முகத்திற்குச் சென்றான். அவன் துரிதமாகச் சென்றாலும் இருட்டாகி விட்டது.

வரதாஸிங் அந்த விடத்தில் போய்ச் சேர்ந்ததும், சங்கரதாஸும் பெரிய நாயகமும் முன்னமே துரைத்தனச் சுங்கப்படகில் ஏறிக்கொண்டு தனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்களென்று தெரிந்தது. அது சற்று விசாலமான படகே. வரதாஸிங் அதனருகிற்சென்றதே சங்கரதாஸ் ஏறு சீக்கிரம் என்றான். வரதாஸிங் உடனே ஏறிக்கொண்டதும் படகு துரிதமாகப் புறப்பட்டது. சங்கரதாஸும் பெரிய நாயகமும் சந்தேகமான வேறு படகுகள் ஏதேனும் வருகின்றனவா வென்று மிக்க எச்சரிக்கையோடு பார்த்துக் கொண்டே சென்றார்கள்.

* * * *

இதற்கு முன்னமே விபாங்கனும் அவனுடைய நம்பிக்கையான ஆட்களில் இருவரும் வாணுத்துறைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அபினி கொண்டு வந்த கப்பலின் கப்பித்தானாகிய கங்காதரனிடமிருந்து எதிர்பார்த்தபடி ஒரு சங்கதியும் வரவில்லை. ஆயினும் அவன் முதல் அனுப்பிய சமாச்சாரப்படி வாணுத் துறையில் ஆயத்தமாகவேயிருப்பான் என்று நம்பியே காரியங்களை நடத்தத் தொடங்கினார்கள்

கடைசியில் விபாங்கன் தன் ஆட்களில் ஒருவனை விளித்து ஒரு தீபக் குறி காட்டும்படி கட்டளையிட்டான். அக்குறி துறைமுகத்தின் ஓரத்தில் காட்டப்பட்டதும் சற்று நேரத்திற்குள் தூரத்திலிருக்கும் கப்பலிலிருந்து எல்லாம் சரியே யென்று பதில் குறி வந்தது.

அதைக்கண்ட விபாங்கன் திருப்தியடைந்து சந்தோஷத்தோடு "எல்லாம் சரியாகவே நடக்கிறது" என்று கூறிக்கொண்டே துறைமுக ஓரத்திலிருந்து சற்று தூரத்திலிருந்த ஒரு காலி வீட்டை நோக்கிச்சென்றான். அந்த வீடு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு நெடுங்காலமாகப் பாழடைந்து கிடக்கும் வீடுகளிலொன்று. அந்த விடத்தில் கடலோரம் அத்தகைய மூன்று நான்கு வீடுகளிருக்கின்றன.

அந்த வீட்டின் முற்றத்தில் சந்திராபாயின் வண்டியிருந்தது. விபாங்கன் கள்ளச் சாரதியாகிய சின்னப்பனைக் கூப்பிட்டு "அந்தப் பெண் எங்கே?" என்று வினவினான். சின்னப்பன் "எஜமானே! வீட்டிற்குள் இருக்கிறாள்" என்றான். விபாங்கன் அப்படியாயின் நான் திரும்பி வருமட்டும் இங்கிரு என்றான்.

அப்பாழடைந்த வீட்டின் அசுத்தமான ஒரு அறை

யில் சந்திராபாய் இருக்கிருள். இப்போதவள் கட்டப்பட்டு மில்லை; அவள் வாயில் துணியடைக்கப்பட்டுமில்லை. ஏனெனில் அங்கு அத்தகைய அவசியமேயில்லை. அவள் எவ்வளவு கூச்சலிடினும் அங்கு கேட்பார் ஒருவருமில்லை. அவள் தப்பியோடிவிடவோ முடியாது. அவளைப் பிடித்து வந்த இரண்டு போக்கிரிகளும் இரண்டு சீனுக்காரர்களும் காவலாக விருக்கிருர்கள்.

விபாங்கன் சந்தடி செய்யாமல் சென்று சந்திராபாயினருகில் நின்ருன். அவன் ஒருவார்த்தைகூடப் பேசவில்லை. ஆயினும் அவன் பார்த்த பார்வையால் அவள் ஆவிசோர்ந்து தரையில் உட்கார்ந்துவிட்டாள்.

இதற்கிடையில் அபினி ஏற்றிவந்த கப்பலிலிருந்து ஒரு படகு புறப்பட்டது. அதில் கள்ளத்தனமாய்க் கொண்டு வரப்பட்ட அபினி தகர டப்பாக்களில் அடைக்கப்பட்டுக் கரையோரமிருக்கும் வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. படகு இறங்கு துறைவந்து சேர்ந்ததும் சீனுக்காரர் டப்பாக்களைத் தூக்கிக்கொண்டுபோய் விபாங்கன் இருக்கும் வீட்டிற்குள் சேர்த்தார்கள்.

விபாங்கன் சந்திராபாயினெதிரில் நின்றுகொண்டிருக்கையில் சீனுக்காரர்கள் அபினி டப்பிகளைக் கொண்டுபோய் அந்த வீட்டிலிருக்கும் ஒரு அறையில் அடுக்கிவிட்டார்கள். அந்த வேலை முடிந்ததே சீனுக்காரர்களில் ஒருவன் விபாங்கனிடம் சென்று "எஜமானே! யாவும் கொண்டு வந்து சேர்த்து விட்டோம்" என்ருன்.

விபாங்கன் சரி என்று தலையசைத்து விட்டு சந்திராபாயை நோக்கி "போ இப்படி" என்று வாயிற்படியைச் சுட்டிக் காட்டினன். சந்திராபாய் நடுக்கத்தோடு அவன் காட்டிய வழியே முன் நடந்தாள். ஒரு சீனுக்காரன்

அவளது உடுப்புப் பெட்டியை யெடுத்துக்கொண்டு கூட நடந்தான். அச்சீனுக்காரனும் விபாங்கனும் அவளை யிழுத்துக்கொண்டு இறங்கு துறைக்குச் சென்று, அபினியை இறக்கிவிட்டு அங்கு காத்திருந்த படகில் அவளை யேறச் செய்தார்கள். சீனுக்காரன் அவள் பெட்டியைப் படகில் போட்டுத் தானும் ஏறிக்கொண்டான்.

விபாங்கன் பயங்கரமான பார்வையாய் அவளை யுற்று நோக்கிய பின் சீனுக்காரர்களை நோக்கி "இவளை பத்திரமாகக் கொண்டு போங்கள். இவள் தப்பிப்போக முயன்றால் உடனே கொன்று விடுங்கள்" என்றான். படகோட்டிகள் உடனே படகைத் துரிதமாய் வலித்துக்கொண்டு சென்றார்கள்.

படகு சென்றதும் விபாங்கன் திரும்பிப் பாழடைந்த வீட்டிற்குச் சென்று அங்கிருந்த சந்திராபாயின் வண்டியில் ஏறிக்கொண்டதும் கள்ளப்பயலாகிய சின்னப்பன் வண்டியை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றான். படகு கப்பலருகிற் சென்றதும் சந்திராபாய் கப்பலின் மேல் கொண்டு போகப்பட்டாள். அவள் கூடப் பெட்டியை யெடுத்துக்கொண்டு சென்ற சீனுக்காரன் அவளைக் கப்பலின் நடுத்தட்டிலிருந்த ஒரு அறைக்கு அழைத்துக்கொண்டு போய் பெட்டியை யங்கு வைத்துக் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு சென்றான். அவன் மேலுக்குச் செல்லும் படிகளின் வழியாய்க் கப்பலின் மேல் தட்டிற்குச் சென்றான்.

சந்திராபாய் தான் அறையி லடைக்கப்பட்டதைக் கண்டதே இரண்டொரு விநாடி அந்த அறைக்குள் முன்னும் பின்னும் திரிந்தாள். அச்சமயம் அவள் பார்வை தன் பெட்டியின் மேல் வீழ்ந்தது. மறு விநாடி யவளுக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வந்ததும் அவள் முகத்தில் ஒரு விதப்

பிரகாசம் தோன்றியது. அவள் மனம் பலவித உணர்ச்சிகளால் படபடத்தது. சங்கரதாஸ் கொடுத்ததாய் வரதாஸிங் கொண்டு வந்து கொடுத்தக் கம்பியில்லாத டேலிபோனின் நினைவு அவளுக்குண்டாயிற்று.

"ஓ! கடவுளே! இது இப்போது வேலை செய்யுமா?" என்று கருதினள். அவள் வீட்டைவிட்டுப் புறப்படும்போது நற்காலமாய் அந்த எந்திரத்தையும் எடுத்துப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டாள். அதன் நினைவு வந்ததும் மிக்க ஆவலோடு பெட்டியைத் திறந்து அக் கருவியை யெடுத்து அதன் வில்லை முடுக்கி "ஓ! சங்கரதாஸ்! சங்கரதாஸ்! நான் வாணுத்துறையிலுள்ள ஒரு கப்பலில் விபாங்களுல் சிறையாக்கப்பட் டிருக்கிறேன். என்னை யெங்கோ பிடித்துப் போகிறார்கள்" என்று கூறத் தொடங்கினள்.

---

## 32-வது அத்தியாயம்

இதற்கிடையில் சங்கரதாஸ், பெரிநாயகம், வரதாஸிங் முதலியவர்கள் துரைத்தனப் படகில் வாணுத்துறைக்கு வந்து சேர்ந்ததும் மூவரும் கீழிறங்கினர்கள். கள்ளத்தனமாய் அபினி கொண்டு வருகிறவர்கள் யாரேனும் இருக்கிறார்களா வென்று நாற்புறங்களிலும் நோக்கினர்கள். கடலின் அலைச்சத்தம்தவிர வேறெவ்விதச் சத்தமும் இல்லை.

வாதாஸிங் தரையில் குனிந்து உற்றுப் பார்த்தான். சீனக்காரரின் காலடிகள் புலப்பட்டன. அவன் உடனே சங்காதாஸையும் பெரிய நாயகத்தையும் நோக்கி "இதோ இதோ பாருங்கள்!" என்று வியப்போடு கூவினன். சங்காதாஸ் உடனே தன் பூதக்கண்ணுடியை யெடுத்து அதன் உதவியால் அக்காலடிகள் எங்கு செல்கின்றன வென்று

நோக்கி அவை ஒரு பாழடைந்த வீட்டைநோக்கிச் செல்கின்றனவென்று கண்டான்.

இவர்கள் அந்த வீட்டெதிரில் போய் நின்று உற்று நோக்கினார்கள். இரண்டொரு விநாடிகளுக்குள் அவ்வீட்டின் கதவு திறக்கப்பட்டது. ஒரு சீனாக்காரன் வெளியில் எட்டிப் பார்த்தான். வெளியில் நிற்கும் சங்கரதாஸ் முதலியவர்களைக் கண்டதும் அவன் அலறிக்கொண்டு உள்ளேயோடத் திரும்பினான்.

ஆனால் சங்கரதாஸ் முதலியவாகள் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து போய் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். உள்ளே நுழைந்தபோது அங்கு இன்னும் இரண்டு மூன்று சீனாக்காரர் இருந்தார்கள். ஒரு விநாடியில் அவர்களுக்கும் விலங்குகள் பூட்டப்பட்டன.

உள்ளே யிருப்பவர்கள் அங்கிருந்த அபினிப் பெட்டிகளை யெடுத்துச் செல்ல மூட்டை கட்டிக்கொண் டிருந்தார்கள். சங்கரதாஸ் முதலியவர்கள் அவற்றை யெல்லாம் கைப்பற்றிக் கொண்டார்கள் அவற்றையும் சிறைப்பட்ட ஆட்களையும் தங்கள் படகில் ஏற்றிக்கொண்டார்கள். தாங்கள் கள்ளத் தனமாகக் கொண்டுவரப்பட்ட அபினியையும் ஆட்களையும் பிடித்துக் கொண்டாலும் முக்கியமான காரண கர்த்தாவாகிய விபாங்கன் தப்பித்துக்கொண்டு போய்விட்டான் என்று அவர்கள் சோர்வடைந்தார்கள்.

பெரியநாயகம் படகை விடும்படிக் கட்டளையிட்டான். உடனே படகு புறப்பட்டது. அபினியைக் கண்டு பிடித்துவிட்ட ஜெயத்தால் சந்தோஷமடைந்த பெரியநாயகம் சங்கரதாஸை நோக்கி "எதோ கைகுலுக்கு!" என்றான். விபாங்கன் அகப்படவில்லையென்று எண்ணத்தாலோ அல்லது எக்காரணத்தாலோ அதிருப்தி தோன்றியதாலோ சங்கரதாஸுக்கு மனதில் சந்தோஷம் ஜனிக்கவில்லை. அவன் மௌனமாகவே பெரியநாயகத்தினிடம் கரத்தை நீட்டினான்.

186534

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

## (2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி.

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய் ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும், படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 56 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | ரத்தினபாய் ... | 1 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2பாகம் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| இராஜாமணி ... | 2 | 0 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் | | | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட், மதராஸ்.